# அம்மா...



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

2020

# அம்மாவுக்கு...!

பாசம் ஊட்டி எமக்கெல்லாம்
நேசத்தை சுவாசத்தில் நிரப்பி
கனிவையும் கருணையையும் ஈந்து
அருள் சுரந்து மனமுவந்து
குருதியைப் பாலாக்கி
அருந் தமிழோடு எமக்கூட்டி
உயிர் கொடுத்த பெருந்தகையே!
தாய்மையே!
பொன் மலராம் மின் இதழ்களை
நின் பொற்பாதக் கமலங்களுக்குக்
காணிக்கையாக்குகின்றோம்!



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு.சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

கடவுளின் படைப்பில் பேசும் தெய்வமாகப் போற்றப்படுகின்ற தன்னலத்தின் நிழல் கூடப் படாத படைப்பென்றால் அது தாயென்ற படைப்பொன்றே. வேறெந்த மொழியிலும் இல்லாத சிறப்பு ‘அம்மா’ என்ற சொல்லில் உள்ளது. கீழைத்தேய நாடுகளில் பெண்கள் எப்போதும் தாயாகப் போற்றப்படுகின்றார்கள். இதனையே சுவாமி விவேகானந்தரும் ‘பெண் எப்போதும் தன் முழு வாழ்க்கையையும் தாய்மைக்கே அர்ப்பணிக்கின்றாள்’ என்கிறார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து வெளிவருகின்ற ‘அம்மா’ இலத்திரனியல் இதழ் - தொகுதி 01 இல் இதன் உருவாக்கத்தின் நோக்கம் தெளிவு படுத்தப்பட்டிருப்பினும் மீண்டும் அதனை வலியுறுத்துவதில் அல்லது சுட்டிக் காட்டுவதில் தவறேதும் இல்லை என நினைக்கின்றேன்.

இன்று மனித விழுமியங்கள் சிறிது சிறிதாக அருகிப் போய்... பணத்தின் அடிப்படையில் உறவுகளை மதிக்கின்ற காலத்தில் வாழ்கின்றோம். தாயின் அன்பிலே திளைத்து, தந்தையின் உழைப்பிலே உயர்ந்த சிலர் இன்று தமது பெற்றோரை அரவணைத்துப் பராமரிக்காது முதியோர் இல்லங்களில் அவர்களைத் தங்க வைக்கின்ற இழிவான நிலைகளையும் நாம் காண்கின்றோம். முதியோர் இல்லங்களின் எண்ணிக்கையில் ஏற்படுகின்ற அதிகரிப்பு, செய்திப் பத்திரிகைகளில் நாம் வாசிக்கின்ற சில செய்திகள் இத்தப்பை உறுதிப்படுத்துகின்றன. எமது வெற்றிகளுக்குப் பின்னால் தோன்றாத் துணையாக எம் பெற்றோரின் அன்பு, தியாகம், உழைப்பு, நேர்மை, உறுதி, கண்ணீர் என்பன அடித்தளமாக அமைந்திருந்தமையால்தான் பல சாதனைகளைச் செய்ய முடிந்தது, முடிகிறது. அதனை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

எமது மாணவ ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் “அம்மா” எனும் இந்த இதழினை வாசிக்க வேண்டும். இவ்விதழுக்கு உயிரோட்டம் கொடுத்துள்ளவர்கள் தமது வாழ்க்கை அனுபவங்களைக் கூறும் போது அதிலுள்ள பண்புகளை மாணவ ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் மனவேற்றம் செய்ய வேண்டும். நீங்கள் கற்பிக்கச் செல்லும் சிறார்களுக்கு தமது பெற்றோரை மதிக்கும் பண்பை ஆழ வேரூன்றி விதைக்க வேண்டும். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் எனும் அமுத வாக்கை வேத வாக்காக போற்றி மதிக்கக் கூடிய சமுதாயத்தை உருவாக்கக் கூடியவர்களாகத் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

அத்தகைய உயரிய நோக்கை உருவாக்குகின்ற “அம்மா” என்னும் நூலின் இரண்டாவது தொகுதிக்கு நல் வாழ்த்துகளை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். “அம்மா” முதலாவது இலத்திரனியல் இதழை சிறப்பாக தொகுத்து வெளியிட்ட எமது விரிவுரையாளர் செல்வி விக்னேஸ்வரி கந்தசாமி ஐயர் அவர்களுக்கும், அவருக்கு உதவியாக அட்டைப்பட வடிவமைப்பு, பக்க வடிவமைப்பு மற்றும் ஏனைய தொழில்நுட்ப உதவிகளை வழங்கிய எமது விரிவுரையாளர் திரு.மகாலிங்கம் நிரேஸ்குமார் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதுடன் “அம்மா” இலத்திரனியல் இதழ் தொகுதி - II சிறப்பாக வெளி வர எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது மனங்கள் அமைதியடைய வேண்டும். எமது மனம் அமைதியடைய வேண்டுமாயின் எமது கடந்த காலங்களில் எமது பெற்றோரின் வாழ்க்கையின் உயர் விழுமியங்களை நாம் பாடமாகக் கொள்ள வேண்டும். எந்தக் குழந்தை தனது பெற்றோரின் சுமையை தனது கைகளில் சுமக்க முன் வருகின்றதோ அந்தக் குழந்தை பெற்றோரை சிறப்பாக - அவர்களின் முதுமைக் காலத்தில் - மகிழ்வுடன் பராமரிக்கும். நாங்களும் எமது பெற்றோரின் சுமைகளைப் பகிர்ந்து கொள்வோம். அவர்களில் அன்பு செலுத்துவோம்.

**திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்**
**பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,**
**கோப்பாய்.**



# இதழாசிரியர் உள்ளத்திலிருந்து...

மனித வாழ்வுக்கு அத்தியாவசியமான ஆதாரமான விடயங்களைப் பதினாறு கதை சொல்லியரூடாக வெளிக்கொணர்ந்து அம்மா - தொகுதி II இதழ் மலர்ந்துள்ளது. இந்த இதழை மணம் வீசச் செய்ய வாய்ப்புத் தந்த யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு சு. பரமானந்தம் அவர்களுக்கு முதற் கண் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இவ்விதழிற்கு உருவம் கொடுத்துச் சீரமைத்து ஒழுங்கமைத்ததுடன் வேண்டிய தொழினுட்ப உதவிகளை செவ்வனே நிறைவேற்றிய ஆசிரிய கல்வியியலாளர் திரு ம.நிரேஸ்குமார் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

பெற்றோர்களுடன் பிள்ளைகள் வாழும் போது பல வாழ்க்கை அனுபவங்களைப் பெறுகின்றனர். பிள்ளைகளைப் பொறுத்தவரையில் குடும்பம் தான் அறநெறிப் பயிற்சி நிலையம். ஒழுக்கப் பயிற்சி நிலையம். பண்பாட்டுப் போதனை நிலையம். வாழ்வியற் பயிற்சி நிலையம். மனித உறவுகளைப் பேணும் முறை, வீட்டுக்கு வருவோரை உபசரிக்கும் முறை, சமூகத்தில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் மனித விழுமியங்களுக்கு மதிப்புக் கொடுத்தல் போன்றவற்றையெல்லாம் பெற்றோர்களைப் பார்த்தும் அவர்களின் வாழ்க்கை முறைகளை அவதானித்தும் பிள்ளைகள் கற்றுக் கொள்கின்றனர்.

பிள்ளைகளின் நெறி பிறழ்வு, துர் நடத்தை, கீழ்ப்படிதலின்மை, ஒழுக்கச் சீர்கேடுகள், சமுதாயத்திற்குப் பயப்படாமை, மனமுறிவுகள், கெட்ட பழக்கங்கள், சட்டங்களை மீறுதல் முதலியன விரும்பத் தகாத நடத்தைகள் குடும்பத்தில் பெற்றோரின் தவறான வழி நடத்தலாலும், சில சமயங்களில் பெற்றோரின் உறுதியற்ற போக்கினாலும், வேறு சில

சந்தர்ப்பங்களில் பெற்றோரின் கடுமையான கண்டிப்பினாலும், தாய் தந்தையரின் பிணக்குகளாலும், குடும்பத்தில் உரிமைப் போர் காரணமாக அமைதியின்மையாலும், அன்புப் பரிமாற்றமின்மை காரணமாகவும் ஏற்படுகின்றன.

குடும்பத்தில் பிள்ளைகள் காண்பவைகளும் கேட்பவைகளும் வாழ்க்கைப் பாடங்களாகின்றன. அதனாற்றான் 'தாயைப் போல் பிள்ளை நூலைப் போல சேலை' என்றும் 'தந்தை எவ்வழி தனயன் அவ்வழி' என்றும் ஆன்றோர் கூறி வைத்தனர்.

ஈன்று புறந் தந்து சான்றோன் எனக் கேட்டு இன்புற்று நிற்கும் தாயானவள் தெய்வத்திற்குச் சமனானவளாகத் திகழுகின்றாள். 'அன்னையைப் போல ஒரு தெய்வமில்லை. அவள் அடி தொழ மறுப்பவர் மனிதரில்லை' என்றவாறாக அத்துணை சிறப்புப் பெற்ற தாயை நாம் என்றுமே கண்ணின் மணியாய்ப் பாதுகாக்க வேண்டும்.

அன்பான மாணவச் செல்வங்களே நீங்கள் ஆரோக்கியமானவர்களாக, ஆளுமை மிக்கவராக, நல்லொழுக்கப் பண்பாடுடையவ ர்களாக வாழ வேண்டியவர்கள். அன்பு, அகிம்சை, நேர்மை, உண்மை, மானுட நேயம் போன்ற மனிதப் பண்புகளை வாழ்க்கையில் கடைப் பிடித்து மனிதப் பெறுமதியோடு வாழும் தகுதியைப் பெற வேண்டும். அக்காலத்தில் இவ்வாறான பண்புகள் எவ்வாறு குடும்பங்களினூடாகச் சொல்லிக் கொடுக்கப்பட்டன என்பதை அம்மா எனும் இதழ் உங்களுக்குத் தெளிவு படுத்தும்.

உங்களின் வளர்ச்சிக்குப் பின்னே தாய் தந்தையின் வேதனை, உழைப்பு, கண்ணீர் என்பன உண்டு என்பதை அறிந்து, உணர்ந்து அவர்களின் பிற்பட்ட முதுமை வாழ்க்கைக்கு ஊன்று கோலாய் மாறி அவர்களின் மகிழ்வுக்குத் துணையாவீர்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்குண்டு.

**நன்றி.**

**செல்வி. விக்னேஷ்வரி கந்தசாமி ஐயர்**
**விரிவுரையாளர்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,**
**கோப்பாய்.**

# தாயிலார் என நெஞ்சகம் தளர்ந்தேன்



**கவிஞர் சோ.பத்மநாதன்**
**(ஓய்வுநிலை விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை)**

இறைவன் உயிர்கள் மீது கொண்ட கருணைக்கு உவமை காட்ட வந்த *அருளாளர்*கள் தாயன்பைத்தான் குறிப்பிட்டார்கள். ‘‘மாத்ருதேவா பவ’’ என்றும் ‘‘தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை’’ என்றும் அறநூல்களும் சமய நூல்களும் விதந்தோதுகின்றன.

உலகியல் இதுவாக, என் அன்னையைப் பற்றி எழுதுவதில் எனக்குத் தயக்கமுண்டு என்பதை முதலில் சொல்லியாக வேண்டும். ஏனென்றால் நான் தாயால் வளர்க்கப்படாதவன், 18 வயது வரை அம்மாவுடன் வாழ்ந்ததுமில்லை. எனக்கு ஒன்றரை வயதாய் இருக்கும் பொழுதே எனக்கிளைய தம்பி பிறந்து விட்டான். இரு சிறு பிள்ளைகளை வளர்க்க அம்மா சிரமப்படுவதை என் தாய் மாமனாரின் மகள் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டா. மாமா வீடும் அம்மா வீடும் அடுத்தடுத்து இருந்தன. வேலியில் ஒரு பொட்டு குமர்ப்பிள்ளையாய் இருந்த மச்சாள் காலையில் வந்து காத்திருப்பா மாமியார் பிள்ளையை (என்னை) தூக்கித் தரும் வரை முகம் மலராது. பாற்போத்தலையும் என்னையும் தூக்கித் தந்தால் தான் முகம் மலருமாம்.

மாமா வீட்டில் சிறுபிள்ளைகள் இல்லாதபடியால் அத்தை மடிமேலும் மாமாவின் தோள் மீதும் வளரலானேன். இந்தக் கதையை எனக்குச் சொன்ன பெரியம்மா அதை முடித்து வைக்கும் பாணி அலாதியானது.

‘‘இப்படித்தானடா 18 மாதத்திலை கொம்மான் வீடு போன நீ திரும்பி வரவே இல்லை!. ‘‘

எனக்கு ஐந்து வயதாய் இருக்கும் போது குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு சம்பவம் அந்தப் பிரிவை நிரந்தரமாக்கியது தான் சோகம். அம்மாவுக்கும் ஐயாவுக்கும் ஏற்பட்ட பிணக்கால் குடும்பம் உடைந்தது. என் சகோதரர்கள் அம்மாவுடன் போக, நான் மாமா வீட்டிலேயே தங்கி விட்டேன். மாமா அம்மாவை மன்னிக்கவில்லை. இருவரிடையே பேச்சு வார்த்தையோ உறவாடுதலோ இல்லை இத்தனைக்கும் சகோதரர்களில் மாமாவுக்கு மிகவும் பிடித்த சகோதரி அம்மா தான்.

இது எனக்கு நன்மையாய் முடிந்தது. என் சகோதர்களுக்குத் கிடைக்காத கல்வியும் வசதிகளும் எனக்குக் கிடைத்தன. ஆனால் நான் அதற்குக் கொடுத்த விலை தாயன்பு! ஆனால் தன் இரண்டு பிள்ளைகளை விடவும் என்மீது அன்பைப் பொழிந்து சீராட்டிய அத்தை எனக்குத் தாயிற் சிறந்த கோயிலானா. இன்று திரும்பிப் பார்க்கின்றேன். மாமா என்னை வளர்த்தெடுத்தார். தன் தங்கையின் மகனான படியால் ஆனால் அத்தை "பிறத்தி மனுஷி! அவ செலுத்திய அன்புக்கு விலையில்லை! நான் S.S.C தேறும் கட்டத்தில் மாமா தொழிலில் நட்டமடைந்து கடனாளியாய் விட்டார். பக்கவாதம் அவரைப் படுக்கையில் போட்டது. அவருக்குச் சுமையாய் இருக்க விரும்பாத நான் 18 வயதில் அரசாங்க வேலையை ஏற்று கொழும்பு போக வேண்டியதாயிற்று.

மாமா என்னை அழைத்து "கொம்மாவைப் போய் பார்!" என்றார். அவர் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசியறியாத நான் அம்மாவிடம் போனேன். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போதெல்லாம் போய்ப்பார்ப்பேன். ஆனால் தங்குவதென்னவோ மாமா வீட்டில் தான். 1960 இல் மாமா மறைந்த பிறகும் இது தொடர்ந்தது.

அம்மாவோடு பெரிய ஓட்டுறவு வரவே மாட்டேன் என்றது. மற்றைய பிள்ளைகளோடு மனம் விட்டுப் பேசும் அளவுக்கு என்னோடு பேசுவதில்லை. ஒரு வேளை எனக்கு இருந்த தயக்கம் போல்...." 18 வயதுப் பையனாக தோளுக்கு மிஞ்சிய மகனாக வந்து நிற்கின்றானே!" என்று சிந்தித்தாளோ என்னவோ!

அம்மாவோடு உறவாடிய கடைசிக் காலத்தில் ஒரு நிகழ்ச்சி, அம்மாவின் சகோதரர்கள் இருவர் குடும்ப விஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அம்மாவைப் பற்றி அவர்கள் குறை கூறியதை நான் கேட்க நேர்ந்தது. அது நடந்த ஓரிரு நாளில், வேறு யாரும் இல்லாத வேளையில் நான் இதைக் குறிப்பிட்டு "இன்னார் இப்படிக் குறை கூறினார்கள், அவர்களோடு கொண்டாடுவதைத் தவிர்த்துக் கொள்" என்று சொன்னேன். எந்தச் சலனமுமின்றி அம்மா சொன்னா "அவரவர் செய்யிறது அவரவரோடை!"இப்படியும் ஒரு வஞ்சகமில்லாத பிறவியா! என்று வியந்த நான் நிகழ்ச்சியை ஒரு கவிதையில் பதிவு செய்தேன். "நினைவுச் சுவடுகள்" என்ற கவிதைத் தொகுதியில் இடம் பெற்ற மகாவாக்கியம் என்று அந்தக் கவிதையைப் பேராசிரியர் சிவசேகரம் தனக்குப் பிடித்த கவிதையாகக் குறிப்பிட்ட போது ஆச்சரியப்பட்டேன்.

முதுமைப் பருவத்தில் வாழ்ந்து கொண்டு என் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும் போதெல்லாம் மகாபாரத்தில் வரும் கர்ணன் என்ற பாத்திரம் நினைவுக்கு வரும்.

# தாயாரின் நினைவுகள் தந்திடும் உணர்வுகள்



**கலாநிதி செ.திருநாவுக்கரசு**
**(ஓய்வுநிலை பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)**

தாயானவள் குழந்தை ஒன்றினைப் பிரசவித்தவுடன் பெறுகின்ற உணர்வு எத்தகையது? என்ற வினாவுக்கான விடையினைக் கூறுமாறு சில வருடங்களுக்கு முன்னர் தமிழகத்தின் “குமுதம்’ சஞ்சிகையானது பிரபலங்கள் சிலரிடம் கேட்டிருந்தது அவர்கள் அளித்திட்ட பதில்களில் ˙மிகச் சிறந்ததென முன்னால் இந்திய சனாதிபதியாயிருந்த அமரர் ஏ.ஜே.பி அப்துல் கலாமுடைய பதிலைப் பிரசுரித்திருந்தது.

“ இன்று தான் தனது குழந்தை அழுவதைக் கேட்கும் தாயானவள் முதலும் கடைசியுமாகச் சிரிக்கிறாள்.” என்றிருந்தது அவரது பதில். இதனாற்றான் இறைவன் தனக்குப் பதிலாகத் தாயைப் படைத்தான் என்கிறார்கள்.

எனது பெற்றோருக்கு நான் மூத்த பிள்ளை. எனக்குப் பின்னர் இரண்டு தங்கைகளும் ஒரு தம்பியும் பிறந்தனர்.நான் அம்மாவுடன் வாழ்ந்த காலங்கள் சொற்பமே. அம்மாவின் முப்பத்தெட்டாவது வயதில் அவருக்கு சுவாத நோய் ஏற்பட்டது. எனக்கு அப்போது பத்தொன்பது வயது .பள்ளிப் படிப்பை முடித்தபின் உழைப்பிற்காகச் சிறுசிறு விவசாய முயற்சிகளில் ஈடுபட்டிருந்தேன்.˙.ஐந்தாறு மாதங்கள் ஊரிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சிப்பந்தியாகவும் செயற்பட்டேன்.

வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பம் எங்களுடையது.தந்தையாரின் சிறிய விவசாய வருமானம் போதாது. அம்மா கெட்டிக்காரி; பன்னவேலைகளில் ஈடுபடுவார்:; கோழி வளர்ப்பார்:; சீட்டுக் கட்டுவார்.ஐயாவின்(அப்பாவின்) கடன்களை அடைத்து விடுவார். உயரமான கம்பீரமான அழகான தோற்றமும் கடின உழைப்பும் கொண்டவர்.எனக்குப் புத்தி தெரிய முன்னரே என்னை வளர்த்தவர்கள் என் அம்மம்மாவும் அம்மப்பாவுமே. எனது பெற்றோர் வீட்டிலிருந்து கூப்பிடு தொலைவு தூரமேஅவர்கள் வீடு இருந்தது.என்னைத் தன் மடியில் கிடத்தித் தாலாட்டியோ தோளில் கிடத்தியோ மடியிலிருத்தி உணவு ஊட்டியோஅருகில் அணைத்துத் தட்டிக்கிடத்தியோ அன்பு செலுத்தியதான அம்மா பற்றிய இனிய நினைவுகள் எதுவும்˙எனக்கில்லை. யாவும் எனக்குப் பாட்டனும் பாட்டியுந்தான்.

நான் க.பொ.த.(சா/த) பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடையாத போது அயலூரான மண்டைதீவிலிருந்த சாஸ்திரியிடம் அம்மா என்னை அழைத்துச் சென்று என் எதிர்காலத்தைப் பற்றிக் கேட்டது என் ஞாபகத்தில் உள்ளது.அருகிலுள்ள பாட்டியொருத்திக்குச் சினிமாப்படம் காட்டுவதற்காக அவரை அழைத்துக் கொண்டு திருவிளையாடல் 'படம் பார்க்கச் சென்றதும் 'வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலுக்கு எப்போதாவது சென்று வழிபடுவதும் என் ஞாபகத்திலுண்டு.

எனது பாடசாலைப் படிப்பு முடிந்ததும் (16வது வயதில்)அரிசி ஆலையொன்றில் சேர்த்து விட ஊரவரொருவர் வந்த போது அம்மாவுக்கு அது விருப்பமாயிருந்தது. என்னுடன் படித்த அயல் வீட்டுப் பையன் இடையில் படிப்பை நிறுத்தி விட்டுக் கொழும்பில் கடையொன்றில் பணி செய்து தனது வீட்டில் ஒரு கட்டுக் கிணறு கட்டிக் கொடுத்தது போல் நானும் வேலை செய்து பணம் திரட்டி கிணறு கட்டித் தருவேன் என அம்மா ஆசைப்பட்டார். இதுவரை வீட்டில் மண்கிணறு தான் இருந்தது. குடிநீருக்கு அயலில் உள்ள கோயில் கிணற்றை நாடுவோம். அம்மாவின் சிறிய ஆசையையும் நிறைவேற்றாது அடம்பிடித்து அழுது திரும்பவும் பரீட்சை எடுக்க படிக்கப் போகின்றேன் எனக் கூறி அம்மம்மா தந்த 25 ரூபாவில் பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பினேன். வாழ்வின் தேவைகளை நிறைவேற்ற முடியாத ஏக்கங்களுடன் தனது உடல் நலத்தையும் பாராது விட்ட எனது தாயார் இறக்க முன்னர் சங்கக் கடையில் வேலை செய்த சம்பளத்தில் சில மாதங்களுக்கு மட்டும் வீட்டுப் பொருட்களை நான் வாங்கிக் கொடுத்தது மாத்திரம் தான் எனது தாயாருக்கு நான் செய்த சிறு உதவியாகும்.

அவரிடம் ஏச்சுப் பேச்சுகள் வாங்கியது, அடி வாங்கியது போன்ற கசப்பான அனுபவங்கள் உண்டு. வறுமையிலும் செம்மையாய் வாழ வேண்டும் என்பதும் தமர் பிறர் பாராது நீதியின் பக்கம் குரல் கொடுக்க வேண்டும் என்பதும் அவரது கொள்கை. துரதிஷ்டம் பிடித்த மகனைப் பெற்றதன் மூலம் எனது தாயாரின் எந்தக் கனவும் நனவாகவில்லை. ஏக்கங்களும் ஆசைகளும் நிறைவேறவில்லை. ஆஸ்பத்திரியில் இருந்து கொண்டு வரப்பட்ட அவரது உடலின் தோற்றம் இன்னும் கண்ணுள் நிற்கின்றது. எப்போதோ ஊரில் உள்ள மெதடிஸ்த இல்லப் பொறுப்பாளராக இருந்த வெள்ளைக்கார அம்மையார் கைக்கமராவினால் எடுத்த அம்மாவின் மிகச்சிறிய புகைப்படமும் 1990ஆம் ஆண்டின் யுத்தப் பின்னணியில் அழிந்து போயிற்று. அம்மாவை நினைவூட்டக் கூடிய எந்தத் தடயமும் இல்லாத நிலையில் அவர் பற்றிய ஏக்கங்களும் துயர் தோய்ந்த நினைவுகளுமே என்னிடம் மிஞ்சி இருக்கின்றது. நெஞ்சில் கனன்று எரியும் துயரத் தீயானது இலேசில் அணைந்து விடாது. கண்ணீராலும் அது தணிக்கப்படாது. அது மூளாத்தீ போன்றது.



# நான் (என்) குடியிருந்த கோயில்



**திரு.ந.பார்த்தீபன்**
**(ஓய்வுநிலை விரிவுரையாளர், வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி)**

அம்மா எல்லா உயிர்களாலும் நேசிக்கப்படும் ஒரு பெண். 'தாயில் இல்லாமல் நான் இல்லை' என யாரும் மறுக்க முடியாது. அதனால் தான் அதிகம் பேசப்பட்ட எழுதப்பட்ட ஒரு விடயம் தாய்மையே. 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' 'நாய் தோல் என்றாலும் தாய்த் தோல்' தாய் மொழி 'தாய் நாடு' இப்படியே எழுதிக் கொண்டே செல்லலாம். அந்த வகையில் என் தாய்தான் சிறந்தவள் என்று யாரும் பெருமைகொள்ள முடியாது. அதே வேளை ஒவ்வொருவருக்கும் அவரவர் தாய்தான் உயர்ந்தவள் என்று எண்ணவும் எழுதவும் முடியும் என்பதில் இரு கருத்தில்லை இந்நிலையில் எனது தாயின் நினைவுகளைப் பெருமைகளைச் சிறப்புகளைத் தியாகங்களை இங்கு பதிவு செய்யலாம் என நினைக்கிறேன். இ∴து ஒரு சிறந்த வாய்ப்பெனவும் விரும்புகிறேன்.

எனது தாயாரின் பெயர் நடராசா இரத்தினம். ""அம்மா உன்னுடைய பெயர் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருந்தும். நீ. நான் என்று நிற்பதையும் பிடிவாதமான பேச்சையும் எதையும் துணிந்து செய்வேன் என்ற நினைப்பையும் பார்க்கும் போது இந்தப் பெயரின் தன்மைதான் காரணமாய் இருக்கும்"" என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு.

சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானைப் 'பித்தா' என்று அழைத்தது தோழமையால் என்பது போல அதீத நெருக்கம் காரணமாக நான் அம்மாவை 'நீ என்னம்மா' ஏனம்மா என்று கதைப்பதுண்டு. பலரும் நீங்கள் என்று அழைப்பதை நான் பின்பற்றவில்லை. அதேபோல் அம்மாவும் என்னை 'நீ வாடா போடா' என்று அழைத்த போதும் பொது இடங்களில் 'நீங்கள்' 'பாருங்கோ'' போன்ற வார்த்தைப் பிரயோகங்களை நான் கேட்கும் போது சிறிது கஸ்டமாக இருந்தாலும் அவருடைய மரியாதை செலுத்தும் பண்பை நினைக்காமல் விட்டதில்லை.

கோழி கொத்திக் காட்டினால் தானே குஞ்சுக்குத் தெரியும் என்பார்கள் எனக்கு இருக்கும் சிக்கனம் அம்மாக் கோழியால் தான் வந்தது. அதை நான் பல சந்தர்ப்பங்களில் ஆரோக்கியமாக உணர்வதுண்டு ஏனெனின் பலருக்கும் அதிகம்

உழைத்துப் பணம் பெற முடியும். ஆனால் சிலருக்கு மட்டும் தான் சேமிக்க முடியும். கைநிறைய சம்பளம் வாங்கி கடனாளியாகி வாழும் பலரை பார்க்கும் போது அம்மாவின் சிக்கனம் என்னை எப்படிப் புடம் போட்டு இருக்கிறது என்பதை நினைக்கிறேன்.

'பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தரணி ஆள்வார்' என்பது என் அம்மாவிற்கு பொருத்தமாய் இருந்தது. தன் திருமணத்திற்குத் தேடிய சொத்துக்களால் தரணி ஆண்டார் என்றுதான் குறிப்பிட வேண்டும். கடின உழைப்பு விடாமுயற்சி தன்னம்பிக்கை போன்ற நல்வாழ்வுக்குத் தேவையான முன்மாதிரிகளை அம்மா செயலால் காட்டினார். பல சந்தர்ப்பங்களை குறிப்பிட்டே ஆக வேண்டும். ….. அவை நம்பமுடியாதவைகளாக இருக்கலாம் ஆனால் அத்தனையும் உண்மையே.

நெல் வயல் வேலைகளில் களைபிடுங்கல் அறுவடைபோன்ற சந்தர்ப்பத்தில் கூலியாட்கள் எட்டு மணிக்கு அல்லது அதன் பிறகு வந்து மூன்று மணிக்கு அல்லது அதற்கு முன் சென்று விடுவார்கள் அக்காலங்களில் அம்மா அதற்கு முன் வயலுக்குள் வேலை செய்யத் தொடங்கி அதற்குப் பின்னரும் வேலை செய்வதை பலதடவை அவதானித்துள்ளேன். பொதுவாகப் பெண்கள் வயற்பக்கம் வருவதில்லை வந்தாலும் குடை பிடித்துக் கொண்டு வரம்புகளில் நடந்து திரிவதையோ நிற்பதையோ பார்த்த எனக்கு அம்மாவின் இந்த உழைப்பு ஆச்சரியத்தைத் தந்ததுண்டு.

பலருக்கு களையெது நெல் எது என்று தெரியாத குழப்பம் இருந்தது. அதன் காரணமாக அவர்கள் களை பிடுங்குவதில்லை மேலும் முழங்கால் அளவோ அதற்கு மேலோ தண்ணீர் வயலுக்குள் நிற்பதால் அது ஒத்துக் கொள்ளாமை எனக் கருதியும் இறங்குவதில்லை. ஆனால் கூலிக்காரர் போல அவர்களுக்கே முன்மாதிரியாக வேகமாக களை பிடுங்குவதும் நெல் வெட்டுவதும் அம்மாவிடம் நான் பார்த்த சிறப்புகள் எனலாம்.

களை பிடுங்கியதன் பின் வீட்டிலுள்ள ஆடுமாடுகளுக்கு அப்புல்லைத் தலைச்சுமையால் வீட்டிற்குக் கொண்டு வருவார் வீட்டிற்கு வரும்போது இருட்டிவிடும் வரும்வழியில் குளக்கட்டில் புற்கட்டை வைத்துவிட்டு குளத்தில் (யார்க்கருக் குளம்) குளித்து விட்டு வருவது வழக்கம் அவ்வாறான ஒரு நாள் குளிக்கும் போது தோடு ஒன்று கழன்று விழுந்து விட்டது. நீந்தவும் சூழியோடவும் தெரிந்ததனால் தேடிப்பார்த்திருக்கிறார். தோடு கிடைக்கவில்லை இருட்டாகியும் விட்டது கவலையுடன் வீட்டிற்கு வந்தவர் அடுத்த நாள் களை பிடுங்கிவிட்டு வரும்போது தேடி அந்தத் தோட்டை எடுத்துக் கொண்டு வந்தார். ஆற்றிலே போட்டுக் குளத்திலே எடுக்கும் அற்புதமல்ல இது. குளத்திலே போட்டு குளத்திலே எடுத்தது. (எங்கே தொலைத்தோமோ அங்கேயே தேட வேண்டும்.) விடாமுயற்சி!

நான் ஒரேயொரு மகனாக இருந்ததால் என் மீதே முழுப்பாசத்தையும் கொட்டி வளர்ந்தார். ஒருமுறை நான் விளையாடும் போது கால்பெருவிரல் நகம் கிழிந்து இரத்தம் சொட்டு சொட்டாக விழுந்து கொண்டிருந்தது. அப்போது பக்கத்து வீட்டில் ‘பெற்றோல்மாக்ஸ்’ விளக்குக் கொளுத்தும் வழக்கம் இருந்தது. அதற்குப் பயன்படுத்தும் ‘‘ஸ்பிற்’’ விட்டால் இரத்தம் போவது நிற்பதோடு காயமும் மாறிவிடும் என்று கூறி அவர்கள் மருந்து விட்டபோது அது வழிந்து சென்று நிலத்தில் ஊறிக்கொண்டிருந்தது.

அந்த வீட்டில் இருந்த சிறுவன் நெருப்பை புதினம் பார்க்க வைத்து விட்டான் ஸ்பிற்றில் நெருப்புப் பரவி காலில் உள்ள ஸ்பிற் விரலுக்கு வந்த போது அம்மா என்காலின் மேல் படுத்து நெருப்பை அணைத்துவிட்டார். அது ஒரு கணப்பொழுதில் காய்ந்து விடும் ஆனால் அந்தத் தாய் உள்ளம்...............

‘‘ஐயோ என்ர பிள்ளை’’ எனக் குளறிக் கொண்டு நெருப்பு தன்மேல் பரவிவிடும் என நினைக்காது செய்து விட்டார்.

பாசம் காட்டுவதற்கு தாய்க்கு நிகரில்லை தன் உயிரைப்பற்றி கவலை கொள்ளாது பிள்ளையின் உயிரைக் காக்க தாயால் மட்டும் தான் முடியும். உடலை உருக்கி பிள்ளையை பெற்றெடுத்தது மாத்திரமல்ல தன் உதிரத்தை பாலாக்கி உணவளிக்கும் ஆதார சுருதி அல்லவா.

86 வயதில் இறைபதம் அடையும் வரையில் என்னைக் கண்டதும் அவருக்குள் ஓர் உற்சாகம் பிறக்கும் அக்காவிடம் ‘‘தம்பிக்கு சாப்பாட்டைக்கொடு. குடிக்க ஏதாவது கொடு’’ என்று நச்சரித்துக் கொண்டே இருப்பார் நான் சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் போது என்னைச் சரியாக கவனிக்க வேண்டும் என்று எழும்ப (எழும்பி நடக்க முடியாத நிலையில் இருந்த போதும்) முற்படுவார் நான் எவ்வளவு தடுத்தாலும் அங்கலாய்த்து அக்காவைக் கூப்பிட்டு பேசி கவனிக்கும் படி சொல்லிக் கொள்வார் இது ஒன்றே அவருடைய நினைப்பு

இறுதிக் காலங்களில் யாரையும் அடையாளம் காண முடியாமல் (வாக்கு மாறல்) இருந்த போதும் என்னை மட்டும் அடையாளம் காணும் திறன் எனக்கே ஆச்சரிமாய் இருக்கும்

குழந்தை தாயை இனங்காண்பது ஒன்றிரண்டு நாட்களில் பால் வாசம்(மொச்சை) காரணமாக என்பது போல் எனக்கும் அம்மாவுக்கும் அப்படியேதும் இருக்குமோ என நான் எண்ணுவதுண்டு. பல குழப்படிகளை யார் செய்தாலும் வெறுத்து

ஒதுக்கி விடுவார். குறிப்பாக அவரது தந்தையாரை பல காலம் வெறுத்து இருந்தார். நிறைய சொந்தங்கள்:'' உன்னுடைய தீபன் செய்யாததையா அவர் செய்தார்'' கேட்பது உண்டு. ஆனால் என்னை மாத்திரம் அவரால் வெறுக்க கோபிக்க முடியவில்லை.

அது தான் பிள்ளைப் பாசமோ.

தாயோடு தாய் மண் பற்று குறைந்திடும் என்பர். இப்போது அதை நான் உணர்கிறேன்

எத்தனை உறவுகள் வந்தாலும் ஓர் தாயின் உறவு போல் வருமா…?



# அன்னை வளர்ப்பினிலே



**திரு. கு.பாலஷண்முகன்**
**(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)**

இது சாதாரண வயிற்றறையல்ல (கருவறையல்ல) இது புலி கிடந்த குகை என்றும், புறமுதுகிட்டு மைந்தன் மடிந்திருப்பானாயின் அவனுக்குப் பாலூட்டிய தனங்களை அறுத்தெறிவேன் என்றும் வீரம் விளைந்த மேலான தாய்மையைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

ஈன்று "புறந்தருதல் என்தலைக் கடனே" என்பது தாயின் முக்கிய கடமையைச் சுட்டி நிற்கிறது. அந்தக் காலத்திலக்கியம் முதல் நேற்றுவரையான இலக்கியம் வரை தாய்மையின் உயர்வு போற்றப்பட்டுள்ளமை அறிதகு விடயமாகும். இவற்றுக்கப்பால் இலக்கியத் தடத்தைக் கடந்து யதார்த்த வாழ்வியலில் தாயின் வகிபாகம் என்பது ஆச்சரியமான உண்மையான ஈடு இணையற்ற உறவு என்பது நுணுகி நோக்குவோர் புரிவர்.

என் தாயின் இரண்டாவது பிரசவத்தில் இவ்வுலகை அனுபவிக்க வந்தவன் யான். முதற் பிரசவம் மூத்த சகோதரி. யான் பிறக்கும் போது தாயார் நாற்பது வயதிற்கு அண்மையில் இருந்தார். இதன் பிரதிபலிப்பைப் பின்னர் யான் ஆராய்ந்ததுண்டு.

எந்தப் பிள்ளைக்கும் முதல் குரு ஆசிரியர் தாய் என்று ஒரு தர்க்கம் உண்டு. நமக்குப் பால் ஊட்டியதில் இருந்து உணவு உட்கொள்ளப் பழக்கியவர், கை பிடித்து நடை பழக்கியவர். முகம் பார்த்துச் சிரிக்கப் பழக்கியவர். என ஏராளமான உதாரணங்கள் கூறலாம். இதனாற்றான் இன்றும் முன் பிள்ளைக்கல்வியில் பெற்றோரின் அனுசரணை- முக்கியமாகத் தாயின் அரவணைப்பு குறிப்பிடப்படுகிறது.

இன்று முன்பள்ளியின் நாமங்கள் உச்சரிக்கப்படுகின்றன. அன்று "நேசரி" அவ்வளவு தான்! ஒரு வயதான அப்பு சைக்கிளில் ஏற்றிச் சென்று விடுவார். மதியம் அம்மா வந்து அழைத்து வருவார். வீட்டில் இருந்து ஏறத்தாள 1Km தூரம் அளவில் எமது முன்பள்ளியிலிருந்து நடந்து வரும் போது அம்மா கூறும் கதைகள் முன்னுதாரணமானவையாக இருக்கும்.

நாம் செய்யத் தகாதவை பற்றி வலியுறுத்துவதாக இருக்கும். மதிய உணவு ஊட்டுகின்ற போதிலும் அறிவை வளர்க்கும் கதைகள், அறிவுரைகள் உண்டபின் களைப்பாறும் போதும் சொற்கள் எழுத்துக் கூட்டிச் சொல்ல வழிகாட்டப்படும்.

ஆரம்பக் கல்விக்காய் பள்ளியில் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) இணைந்த பின்னர் கண்டிப்பு சிறிது அதிகமானது. பென்சில் தொலைக்கக் கூடாது. அழிறப்பர் அடிக்கடி தொலைத்தால் கண்டிப்பு! ஆங்கிலச் சொற்களை கூறி எழுத்துக் கூட்டிச் சொல்வதற்குப் பயிற்சி தரப்பட்டது.

அம்மாவின் சொந்த ஊர் கொல்லங்கலட்டி அங்கிருந்து 3 – 4Km தூரத்தில் தான் காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலை. பாடசாலை விடுமுறையில் வருடம் மூன்று தடவைகள் கொல்லங்கலட்டிக்குச் சென்று தங்குகையில் காலை உணவு தயாரிக்கும் போது ஏதோ ஒரு கதவண்டையில் உட்கார்ந்து பாடசாலைப் பாடங்களைப் படிக்க வேண்டும். சீமெந்துத் தொழிற்சாலையில் இருந்து 5 மணி 6 மணி 7 மணி 8 மணி என காலையில் சரியான நேரத்திற்கு ஓர் ஒலிச் சமிக்ஞை கேட்கும் (சங்கு ஊதல் என்பர்) குறித்த நேரம் வரை காலை உணவு தயாரிக்கும் வரை அந்தச் சங்கு ஊதும் ஒலி வரை பாடத்துடன் இருக்க வேண்டும்! இது அம்மாவின் நேரசூசி!

கொல்லங்கலட்டி ஒரு கிராமம். அம்மாவின் வீட்டில் பச்சை, செம்மஞ்சள் நிற இளநீர் மரங்கள் இருந்தன. குறித்த நாளில் ஒரு வேலையாள் மூலம் இளநீர் குலையாக இறக்கப்படும் 1- 2 நாள்களுக்கு வழுக்கல் வெட்டிப் போட்ட இளநீர் 1- 2 டம்ளர் ஒவ்வொருவருக்கும் சும்மாவே வெட்டி வார்த்துத் தருவார். அங்கு அடிக்கடி குண்டுத் தோசை, பால் அப்பம் உயர்தரமாய் அமையும்!

எங்கள் வீட்டில் இருந்து (கொக்குவில்) 1Km தூரத்தில் உள்ள இன்றைய மருத்துவ பீடத்திற்கு அருகில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு அப்பா என்னை அழைத்து சென்று விட்டார். அம்மா வீட்டுப் படலையில் பார்த்துக் கொண்டு நிற்கிறார். அப்போது அவ்விடத்தில் வந்த அயல் வீட்டு அண்ணை ஒருவர்

“என்ன யோசித்துக் கொண்டு நிற்கிறீங்கள் என்று கேட்க” தலை முடி வெட்டத் தந்தையுடன் போனவன் தொப்பி கொண்டு போகவில்லை” என்று அம்மா பதிலளித்துள்ளார். தலை முடி வெட்டிக் கொண்டிருந்த பாதியில் வெளியில் பேச்சுக்குரல். அந்த அயல் வீட்டு அண்ணன் கொண்டு வந்து அப்பாவின் கையில் தொப்பியைக் கொடுத்தார்! இன்று இப்படி அயல்வீட்டு அண்ணனுமில்லை இப்படி அன்பான அன்னையுமில்லை.

இரண்டாம் நிலைக் கல்வி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் தந்தையாரும் அமரரான நிலையில் அன்னை தான் அம்மாவும் அப்பாவும் அந்நேரம் நெருக்கடிகள் பல சூழ்ந்திருந்த காலம். இடப்பெயர்வுக்கு முன் தரம் - 9, தரம் 10 இல் தவணைப் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தியில்லை என்பது பெற்றோர் இருவரும் கவலைப்பட்டு அதனை வெளிப்படுத்தியிருந்தனர்.

இடப்பெயர்வின் பின் மீள யாழ் இந்துவில் கல்வி தொடர்கையில் காலச்சூழல் கடினமாகவிருந்தது. வயதும் கட்டிளமைப்பருவமாய் இருந்தது. இப்பருவத்தின் பண்புகளில் முதன்மை பெறும் சுதந்திர உணர்வு, தலைமைத்துவ நாட்டம்,…….. ஆலோசனைகள், உபதேசங்களை பெரிதாக ஏற்றுக் கொள்ளா மனநிலை அன்றிருந்தன.

இதனால் அன்னையின் சொற்கள் பெரியளவில் கடைப்பிடிக்கப்படாத நிலையில் என்மனம் நிறைந்த என்னை விருப்பத்துடன் வழிநடத்திய தாவடியைச் சேர்ந்த ஓர் ஆசிரியரிடம் சென்று முறையிட்டார். அன்னை.

ஒரு நாள் பாடசாலை நிறைவுற்றதும் அன்பாக அழைத்து அந்த ஆசிரியர் சில கருத்துக்கள் பகிர்ந்தார். தொடர்ந்து ‘‘அம்மாவிடம் பிடிக்காத விடயங்கள்’’ பற்றி எழுதித் தரும்படி கேட்டார்.

‘‘சேர் குடும்பம் என்றால் சரி, பிழை, சச்சரவுகள் வரும் தானே, அம்மாவின் பிழை என்று எப்படி எழுதித் தருவது’’ என்று மறுத்தேன்.

அப்போது அந்த ஆசிரியர் கூறியது ‘‘ஒருவன் , தாய் உயிருடன் இருக்கும் போது கவனியாது இறந்த பின் தங்கத்தில் மாம்பழம் செய்து படைத்தான்’’ இக்கதை 2 வரிகள் தான் ஆனால் மிக ஆழமானது!

என் அம்மாவிற்கு தங்க மகனாக யான் இருப்பதாகக் கூறி இதனை முறைப்பாடு சொன்ன அம்மாவிடமும் குறிப்பிட்டு உலக வாழ்வில் இவை போல பலவும் வரும் போகும் என்பதை விளக்கி சமாதானம் செய்து வைத்தார். சரியாகப் பத்து வருட இடைவெளியில் எனது முதுகலைமாணிப்பட்டமளிப்பு விழாவிற்கு அம்மாவும் அந்த ஆசிரியரும் ஒரே காரில் வந்தனர். மண்டபத்துள் வந்து பட்டமளிப்பை நேரே பார்த்து மகிழ்ந்தனர். இதுபோல ஆசிரியர் தாயுறவு இன்றும் ஆச்சரியம் தருகிறது.

95ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் உயர்தர கலைப்பிரிவில் சென்றமர்ந்தேன். இது சிறிது அம்மாவிற்கு விருப்பமில்லை. ஆனால் எனது கல்வி முயற்சிகள் நன்றாக அமைய மிகவும் மகிழ்ந்தார். தரம் 10 இல் பெறுபேறு குறைந்தமையால் கண்டித்த அம்மா உயர்தரத்தில் தவணை இறுதியில் முதலாம் பிள்ளை, Optimi சான்றிதழ் என்பவற்றைத் தன் கையாலேயே பெற்று மகிழ்ந்தார். இவ்வாறு தன்னைத் திருப்திப்படுத்திய மாற்றத்தை மற்றவர்களிடமும் பகிர்ந்தார். எனக்கு ஆச்சரியமாக ஊக்கமாக அமைந்த சந்தர்ப்பங்கள் இவை.

இது போல் சாதாரண தரம் வரை பரிசில் விழாவில் பரிசு வாங்காத யான் உயர்தரம் கற்கும் போது ஒரே நாளில் இரண்டு தங்கப்பதக்கங்கள் அடுத்தடுத்து இரண்டு பரிசில் விழாக்களில் பெற்றேன். துவிச்சக்கரவண்டியில் அம்மாவை ஏற்றிச் சென்று பரிசில் வாங்கி இறங்கி வர அம்மாவின் மகிழ்ச்சி சொல் கடந்ததாய் இருந்தது.

அப்போது ஆலய மஹோற்சவ காலங்களில் சமய உரைகள் இடம்பெறும். தொலைக்காட்சி பெரிய பிரபலம் பெறவில்லை. அந்நேரம் பல்வேறு ஆலயங்களிலும் 10 -15 நாள்கள் தொடர் சமயப் பேச்சுக்கள் பேசினேன். நிறைவு நாளில் ஆலயத்தார் தங்கள் அன்பை நன்றியைத் தெரிவித்துச் சிறு விழா எடுப்பர். இதில் ஒரு சந்தர்ப்பத்தில் அம்மாவையும் அந்த ஆலயத்தினர் அழைத்து மகிழ்வித்திருந்தனர். இது அவரது உள்ளத்தில் மிகுந்த நிறைவை அளித்தது. பின்னே தமிழில் முதுகலைமாணிப் பெறுபேறு வந்தவுடன் வாயால் சொன்னவுடன் கட்டி அரவணைத்து முத்தமிட்டார். வாழ்நாளில் இது மறக்க முடியாதது. இவ்வண்ணமாய் அன்னையின் வளர்ப்பு முறைகளும் நினைவுகளும் நீரோடையாய் நீளும்.

இன்றைய உலகைக் காண ஆச்சரியமாக இருக்கிறது.

என் அன்னையும் கண்டித்தார். எனக்கும் சில சமயம் கோபமும் வெறுப்பும் வந்தன. ஆனால் தவறான முடிவுகளோ வெறி உணர்வோ வரவில்லை அன்றைய ஆசிரியர்கள் காட்டிய பொறுப்புணர்ச்சி சொற்களில் அளவிட முடியாதது. பிள்ளை வளர்ப்பும் மாணவர் வளர்ச்சி விருத்தியும் சிறப்புற அமைந்தது.

இன்றைய உலகிற்கு 15 – 18 வருடம் முந்திய வாழ்க்கை முறையே ஒரு நல்ல பாடம்

அதிலும் அன்னை வளர்ப்பு உணர வேண்டியதே அன்றி எடுத்துரைக்க முடியாதது!



# பாசமும் புரிந்துணர்வும் பரோபகாரமும் கொண்ட பரமேஸ்வரி ரீச்சர்



**திரு ம.பா மகாலிங்க சிவம்**

**(ஆசிரியர் ஆலோசகர், வலிகாமக் கல்வி அலுவலகம்)**

எனது தாயார் பரமேஸ்வரி பார்வதி நாதசிவம். ஆரம்பக்கல்வி ஆசிரியர் கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயத்தில் முப்பது வருடங்களுக்கு மேலாக பணியாற்றியவர். மூன்று பரம்பரை மாணவர்களுக்கு கற்பித்தவர் பரமேஸ்வரி ரீச்சர் என அனைவராலும் அன்பாக அழைக்கப்பட்டவர்.

அவருடன் வாழ்ந்த சிறுவயது வாழ்க்கை என்றும் மறக்கமுடியாத வாழ்க்கை. எப்போதும் அறநெறிப்படியே எம்மை வளர்த்தார். எமது அப்பா புலவர் ம.பார்வதிநாதன் சிவம் அடிக்கடி பெருமையாகக் கூறும்…'' எங்கட நான்கு பிள்ளைகளும் ஒருநாளும் இன்னொருவருடைய காசை தொடமாட்டார்கள்'' என்ற பாராட்டிற்குப் பின்னணியாக இருந்தார்.

அப்பா அச்சகம்- பத்திரிகை என்று பல்வேறு இடங்களிலே வேலை பார்த்தார். சம்பளம் மிகக் குறைவு. அம்மாவின் ஒரு சம்பளத்தில் தான் வாழ்க்கை. வறுமையற்ற சிக்கனமாக வாழ்க்கை. ஆனாலும் நாங்கள் இரவிலே சோறு இருந்தாலும் சாப்பிடமாட்டோம். பிட்டு அவிக்க வேண்டும் சோற்றை இரவில் அம்மா மட்டுமே சாப்பிடுவார்.

ஒருநாள் அப்பாவின் நண்பர் 'சங்கீத பூஷணம்' வி.பரமலிங்கம் எமது வீட்டிற்கு விருந்தினராக வந்திருக்கிறார் இரவு உணவு வழங்கப்படுகின்றது. நாம் சோறு இருந்தாலும் அவர் சாப்பிட்டு முடிந்த பின் மிஞ்சும் பிட்டை உண்பதற்காக காத்திருக்கிறோம்

அவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்'' எனக்கு போதும்'' என்கிறார்

'.'' இல்லை இல்லை இன்னும் கொஞ்சம் போடுகின்றேன்.'' என்றார் அம்மா அவர்'' வேண்டாம்'' என்று மீண்டும் மறுக்கிறார்.

உடனடியாகவே பிட்டு நான்கு பிள்ளைகளினதும் தட்டுக்களில் பங்கிடப்படுகின்றது. சிறிது நேரத்தில் விருந்தாளி'' ரீச்சர் பிட்டு நல்லா இருக்கு இன்னும் கொஞ்சம் வையுங்கோ ''என்று கேட்கிறார்.

பிட்டு இருந்தால் தானே…..'' நீங்கள் வேண்டாம் என்றீர்கள் நான் பிள்ளைகளுக்கு போட்டு விட்டேன்'' என்று உண்மையைக் கூற அம்மா எவ்வளவு சங்கடப்பட்டிருப்பார்.

நாங்கள்'' எல்லா வீட்டிலும் ரேடியோ வாங்கி விட்டார்கள்.. எங்களுக்கும் வாங்கித் தாருங்கள்'' என்று கேட்ட போது அம்மா வைத்த நிபந்தனையை மறக்க முடியுமா…. இரவிலே பிட்டுக்குப் பதிலாக சோறு சாப்பிட வேண்டும் என்பது தான் அந்த நிபந்தனை. சாப்பிட்டோம். வாங்கினோம்.

நான் ஐந்தாம் வகுப்பில் படிக்கும் போது நிகழ்ந்தது இந்தச் சம்பவம். எனக்கு பனை மட்டையின் கருக்கு காலில் வெட்டிவிட்டது. எல்லோரும் ஏற்பூசி போடவேண்டும் என்றார்கள்.

எமது கிராமம் மயிலங்கூடல் தெல்லிப்பளை வைத்தியசாலைக்குச் செல்ல 795 பஸ்தான் ஒரே வழி பஸ் ஏற ஒரு கிலோமீற்றர் தூரம் நடக்க வேண்டும். தெல்லிப்பளைச் சந்தியில் இறங்கி வைத்தியசாலைக்கு மீண்டும் ஒரு கிலோமீற்றர் நடக்க வேண்டும் நானும் அம்மாவும் வைத்தியசாலையை அடைந்தோம் வரிசையில் காத்திருந்து சென்றால் வைத்தியர் அம்மாவின் நண்பி பார்வதி அவர்கள். ஏற்பூசி எழுதித்தந்தார்.

ஏற்பூசி போடும் இடத்திற்கு வந்தால் ஏற்பூசி போடப்பட்ட பிள்ளைகளின் அலறல் வயிற்றைக் கலக்குகின்றது.

'எனக்கு பயமாய் இருக்கிறது நான் ஊசி போடேல'

'ஊசி போடாட்டா ஏற்பாக்கிப் போடும்'

'ஏற்பாக்கினால் ஆக்கட்டும் நான் ஊசி போடமாட்டன்'

'சரி அப்படியென்றால் வீட்ட போவம் மரமஞ்சள் அவிச்சுத் தாரன்'

மீண்டும் நடந்து வந்து பஸ் ஏறி நடந்து வந்து வீட்டை அடைந்தோம் ‘’’ஊசி போடமாட்டன் என்றால் முன்னுக்குச் சொல்லியிருக்கலாமே இவ்வளவு தூரம் போயிருக்கத் தேவையில்லையே ஏன் வீணா அலக்கழிச்சனி’’ என்று எந்தக் கேள்வியும் கேட்காத ஏசாத தாய்க்கு மகனாக நான் பிறந்தது பெரும்பாக்கியமல்லவா.

எனக்கு வேலை கிடைத்தவுடன் மாதா மாதம் ஒரு தொகை பணம் தருவதாகி கூறி முதல் மாதப் பணத்தைக் கொடுத்தேன்:’’ எனக்கு எதற்குக் காசு நீ வைத்திருந்து செலவு செய்’’ என்று வாங்கவே மறுத்துவிட்டார். நான் எவ்வளவோ சொல்லியும் அவர் ஏற்றுக் கொள்ளவேயில்லை’’ வாங்கா விட்டால் அவன் மனம் நொந்து போவான்’’ என்று அப்பா சொன்னபின்தான் நான் கொடுத்த பணத்தில் அரைப்பங்கை எடுத்துக் கொண்டார்.

தனது ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை ஏழைகளுக்கு உதவ என்றே வைத்துக் கொண்டார். அவரது உதவியை இன்று வரை நன்றியுடன் நினைவு கூறும் உறவினர்கள் அயலவர்கள் எனது நண்பர்கள் என பலர் இருக்கின்றனர்.

கலைஞர்களுக்கான உதவித் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலகத்தினால் மாதாந்தம் நாலாயிரம் ரூபா நிதி அப்பாவிற்கு வழங்கப்பட்டது.’’ எனது பிள்ளைகள் எல்லோரும் வேலையில் சேர்ந்து விட்டனர் இனி எனக்கு இந்தப் பணம் தேவையில்லை வசதி குறைந்த வேறொரு கலைஞனுக்கு இதை வழங்குங்கள்’’ என கடிதம் எழுதி அப்பா பணத்தைத் திருப்பிவிட்டார். எங்களுக்கு எதுவும் தெரியாது

பல மாதங்களுக்குப் பின்னர் பட்டப்படிப்புகள் கல்லூரியில் என்னுடன் விரிவுரையாளராக இருந்த மனோகரன் சேர் (கணக்காளர் பிரதேச செயலகம்) பலர் முன்னிலையில் “இவற்ரை அப்பாவுக்கு பிழைக்கத் தெரியாது அரசாங்கம் கொடுத்த காசை திருப்பி அனுப்பியிருக்கிறார். தனக்கு தேவையில்லையென்றால் பிள்ளைகளுக்குக் கொடுத்திருக்கலாமே’’ என்று கோபமாக ஏசியபோதுதான் இதை அறிந்து கொண்டேன் இதற்குப் பின்னணியிலும் எனது அம்மாவின் பங்கிருந்தது.

இத்தகைய அம்மாவை ஏன் அப்பாவை

எப்பிறப்பில் காண்பேன் இனி!



# அம்மா என்ற முதல் ஆசான்



**திருமதி. ராணி சீதரன்**
**(ஓய்வு நிலை தமிழ்த்துறை விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்)**

அம்மா என்பது மந்திரச் சொல் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனின் உதட்டிலும் உச்சரிக்கப்படும் உயிர்ப்புநிறைந்த சொல். துன்பத்திலும் இன்பத்திலும் தோள் கொடுத்து உதவும் சொல் அந்தச் சொல்லுக்குரிய அற்புத வடிவம் தோன்றியும் தோன்றாமலும் நின்று தன் பிள்ளையை இயக்கும் ‘‘தாயிற் சிறந்த கோயிலும் இல்லை என்பார்கள்’’ தாய் தெய்வத்திற்குரிய உயர்ந்த நிலையில் இருப்பதால் அவ்வாறு போற்றப்படுகின்றாள். கருவில் சுமந்து உருவம் கொடுத்து தன் உதிரம் கொடுத்து தன்குழந்தை பற்றிய நினைவுகளோடு வாழும் தாய் ஒரு நாளும் மனதாலும் கேடு நினைந்திருப்பாள் என்று சொல்ல முடியாது. பிறந்தவர் அனைவரும் அம்மா என்ற உறவோடு இணைந்திருப்பார்கள் ஏனென்றால் தாய் தான் பிள்ளையின் முதல் பள்ளிக்கூடம். அங்குதான் மொழி பண்பாடு, விழுமியம், வாழும் முறை அனைத்தும் பதிவு செய்யப்படுகின்றது.

எனது அம்மா எனக்கு முதல் ஆசிரியர் முற்றத்தில் மணல்பரப்பி விரலை எழுத்தாணியாக்கி எழுத்தையும் சொல்லையும் சொல்லிச்சொல்லி எழுத வைத்தவர் உச்சரிப்புப் பிழையோ எழுத்துப் பிழையோ தெரிந்தால் விரல் மண்ணில் அழுத்தும் தவறை உணர்ந்து திருந்துவேன் சொல்லித் திருத்துவதை விட குறிப்பால் அறிந்து திருந்து என்பதையும் அரிச்சுவடியோடு சேர்த்துப் புரியவைத்தவர் அம்மா.

திறமையிருந்தாலும் முன்னாலே சென்று கருத்தை வெளிப்படுத்தத் தயங்குவேன் அம்மா அதைக் கவனித்தும் கவனிக்காதவர் போல இருந்தார்.

எனது அழகைப்பார்த்துப் பார்த்து இரசித்தவர் எனது அம்மா ‘‘உனக்கு எதைப்போட்டாலும் அழகு’’ என்று சொல்லும் போது ஆரம்பத்தில் அதைப்பொய் வார்த்தையாக அலட்சியப்படுத்தினேன் என்ன அதிசயம்.... ஒவ்வொருவரும் என்

அழகைப் பாராட்டினார்கள் கண்ணழகு, சிரிப்பழகு, முடியழகு என்று புகழ்ந்த போது அம்மாவின் வார்த்தையில் பொய் இல்லையென்று உணர்ந்தேன்

என்னிடமிருந்து ஒதுங்கும் இயல்பு மெல்ல மெல்ல மறைந்தது எனக்கே தெரியாது. துணிச்சலோடு பேசவும் விவாதிக்கவும் என்னால் முடிந்ததை அவதானித்தேன் தட்டிக் கொடுப்பு இருந்தால் தாழ்வுச் சிக்கல் அகன்றுவிடும் என்ற உளவியல் பாடத்தை அம்மா கற்றுத் தந்தார்.

சின்னவயதில் எமது கிராமத்துப் பாடசாலையில் படித்தேன். எட்டுப்பிள்ளைகள் கொண்ட நாங்கள் கூட்டுக்குடும்பத்தில் வளர்ந்தோம். ஐந்தாம் வகுப்பிற்குப் பின்னர் வச்தியான பிள்ளைகள் ஆசிரியரின் பிள்ளைகள் எல்லோரும் பெரிய கல்லூரிகளுக்குப் போய் விட்டார்கள் என்னோடு ஒரு சிலர்தான் எஞ்சியிருந்தனர். நண்பர் உறவுகள் என பிரிந்ததினால் தனித்துப் போன நிலையில் ஆற்றாமையினால் வருந்தினேன் அதுவே பெரிய மனக்குறையாகிப் போக அம்மாவிடம் சென்று கேட்டேன் வேறுபாடசாலை போவது பற்றி எனது கருத்தை அறிந்த அம்மா சொன்ன வார்த்தைகள்……..

''படிக்கிற பிள்ளை எங்கேயும் படிக்கும் நீ படிப்பாய் இங்கே படி யாரும் மெய்கண்டானிலா படித்தாய் நீ போ என தள்ளி வைக்கின்றார்களா பார்ப்போம்'' அம்மா சிரித்துக் கொண்டே சொன்ன போது கவலை கூடியது எனினும் சவாலாக எடுத்துக் கொண்டேன் க.பொ.த. சாதாரண தரத்தில் திறமையாக சித்தியடைந்தேன் உயர்தர வகுப்பு குறிப்பிட்ட பாடசாலையில் இல்லாத படியால் ஆரம்பத்தில் போகவிரும்பிய பாடசாலையில் சென்று படித்தேன் முதல் தரத்திலேயே பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகினேன். என்னோடு படித்தவர்களில் நான் மட்டும் தான் அந்த வாய்ப்பைப் பெற்றேன். இருக்கும் இடம் முக்கியமில்லை எப்படி இருக்கப் போகின்றேன் என்பது தான் முக்கியம் என்பதை அம்மா வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போக அன்று சொல்லித் தந்தார்.

துள்ளித்திரியும் பருவத்தில் துடுக்குத் தனமாக மற்றவர்களை துன்பப்படுத்திப் பார்ப்பது இயல்பானது அதைத் தானாகவும் செய்யலாம் மற்றவர்களின் தூண்டுதலாலும் செய்யமுடியும்

பக்கத்து வீட்டு அக்கா கறுப்பு என்பதால் கறுப்பி என்ற அடைமொழி அவரின் பெயரோடு சேர்ந்து விட்டது தோழியர் சொல்லித்தர நானும் கறுப்பி என்று அழைத்துவிட்டேன். கோபத்தோடு ஏசிவிட்டு சென்ற அக்கா தாயிடம் சொல்லி விட்டார்

தாய் எனது அம்மாவோடு அடிக்கடி வந்து இன்ப துன்பங்களைப் பரிமாறுபவர் தெருவிலே சொன்னது காற்றோடு போய் விட வீட்டிற்குப் போனேன். அருகிலே அந்த அக்காவின் அம்மாவுடன் ஏதோ உரையாடல் இடம் பெற்றது. அதைப் பற்றிய அக்கறை எனக்கில்லை.

உள்ளே போன என்னை அம்மா அழைத்து கையை மூடிய படி நீட்டி ‘‘இந்தா’’ என எதையோ தருவதற்கு முயற்சித்தார். அதைவாங்கச் சென்ற கையைப்பிடித்து பூவரசம் தடியால் விளாசினார். அக்காவின் அம்மா ‘‘ஐயோ நான் தெரியாமல் உனக்குச் சொல்லிப்போட்டேன்’’ என்று விலக்கிவிட்டார்

அன்றுதொடக்கம் இன்று வரை பேசிய வாரத்தையால் புண்படுத்தி இருப்பேனோ என திரும்பவும் சிந்தித்துப் பார்ப்பேன்.

இவ்வாறு எனது முதல் ஆசான் அம்மா எனக்கு நிறையப் பாடங்களைக் கற்றுத் தந்தார்.

அந்த அனுபவங்கள் வாழ்க்கைமுழுவதும் தொடர்ந்து வருகின்றது. இன்றும் அம்மா நான் தவறுவிட்டால் சுட்டிக்காட்டி வழிப்படுத்துவார்.

வழிப்படுத்தல்கள் வாழ்க்கையை வளமாக்கும்.



# பாசப் பிணைப்பினால் "பாடி விடாதே" எனத் தடுத்த தாய்



திரு.ச.லலீசன்
(பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

புறநானூற்றுப் புலவன் ஒருவன் தாய்க்குரிய கடமை, தந்தைக்குரிய கடமை எனத் தனித்தனியே கடமைகளைக் குறிப்பிட்டுக் காட்டினான்.

"*ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே*
*சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே*" என்பது அவனது அபிப்பிராயம்.

ஆயினும் இருகடன்களையும் ஒருமுகத்தால் செய்ய முடியும் என நிருபித்தவராகவே என்தாயை நான் காண்கிறேன்.

இறைவனின் பெருமையை எடுத்துரைக்க விழைந்த மணிவாசகர்

"*நாயிற்கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே*" என்றே பேச வேண்டிய தேவை எழுந்தது. தந்தையைக் காட்டிலும் இறைவன் பெரியன் என்று சொல்வதை விட தாயைக் காட்டிலும் பெரியன் என்று கூறுவதன் ஊடாக தாயின் மேன்மை இங்கு உணர்த்தப்படுகின்றது.

சிறுவயது தொட்டே இசைக்கலை பயில வேண்டும் என்ற ஆவல் என்னுள் குடிகொண்டிருந்ததாயினும் தாயின் ஓர்மம் அதற்கு இசைவுவழங்கவில்லை. அதற்குப் பின்னால் ஒரு சுவாரசியமான சம்பவம் இருந்தது.

நீர்வேலியில் எனது அன்னையின் வீட்டிற்கு அருகில் வாழ்ந்த தமிழகத்தில் இருந்து வருகை தந்திருந்த நாடகக் கலைஞர் ஒருவர் குடும்ப வறுமையால் பாதிப்புற்றிருந்தார். ஆர்மோனியப் பெட்டியைத் தவிர்த்தால் வாழ்க்கைக்கென்று ஒன்றுமேயில்லை என்பது அவரது நிலை. ஊரவர்களை மற்றும் பெரியவர்களைக் காணும் தோறும் நிகழ்ச்சிக்கான

வாய்ப்புக் கேட்பது அவரது வாய்ப்பாடு. இந்தப் பாதிப்பு என்னில் தாக்கம் செலுத்தும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

பாடசாலையில் என்னையும் ஒரு பாட்டுக்காரனாக சங்கீத ஆசிரியர் கண்டு பிடித்தார். இன்னும் படித்தால் பாடலாம் என்று ஆர்வமூட்டினார். ஒரு விஜயதசமி நாளில் எனது பாடசாலை சங்கீத ஆசிரியர் சிவஞானசுந்தரத்திடம் பாடம் கேட்பதற்குத் தயாரானேன்.

அப்போது தான் அந்தச் சம்பவம் நேர்ந்தது. "சங்கீதம் படித்தால் படிப்பை விட்டு விடுவாய். உனக்கு வாய்ப்புக் கேட்க என்னால் வீடு வீடாகத் திரிய ஏலாது. "

என்னைத் தடுத்த தாயின் வாதமே மேலெழுந்து நின்று தந்தையிடம் வென்றது. இத்தனை ஓர்மத்திற்கும் பின்னால் இருந்தது .- உலகமறியாத என் தாய் - என்மீது கொண்டிருந்த அதீத அன்புதான்.

இன்று இணைப்பாட விதானச் செயற்பாடுகள் ஒருவனுடைய ஆளுமை விருத்திக்கான அத்திபாரம் என்பதை உணர்கின்றோம். ஒருவன் முழுமை பெறுவதற்கு கலை மற்றும் விளையாட்டுச் சார்ந்த செயற்பாடுகள் அவசியமானவை. எனது தாய் இத்தகைய புல அறிவைப் பெற்றிருக்கவில்லை. அவருக்குரிய வழிகாட்டலைக்கூட யாரும் வழங்கியிருக்கவில்லை. மகன்மீதான அன்பின் உயர்வின் முன்னால் அவரது மனதை மாற்றும் திராணியும் யாரிடமும் இருக்கவில்லை.

என்தாய்க்குத் தெரிந்த ஒரே செய்தி – படிப்பு, படிப்பு, படிப்பு – என்பதுதான். ஒரே பிள்ளையான நான் சமூகத்தில் அந்தக் காலத்தில் ஏற்பட்ட திசைமாற்றங்களுள் சிக்கிவிடாமல் உயர்ச்சியடைய வேண்டும் என்பதே அவரது அவாவாக இருந்தது. இது பல்வேறு புறக்கிருத்தியங்களுக்கும் தடை போட்டது.

ஆயினும் என்தாய் தன்னளவில் அறிந்திருந்த உளவியல் என்னை ஆளாக்கியது. விளையாடுவதற்கு என் வீட்டிற்குப் பிள்ளைகள் அழைக்கப்பட்டனர். தாயின் நேரடிக் கண்காணிப்பில் விளையாட்டு. கல்விக்காக வெளியே சென்றால் குறித்த நேரத்திற்கு வீடு திரும்ப வேண்டும் என்ற கட்டுப்பாடு. அப்படி வரத்தவறினால் பெண்மைக்குரிய அச்சத்துடன் - பிள்ளையாரே... காளி ஆச்சி... என்று தான் அறிந்த தேவாரங்களோடு கண்ணீர் சிந்தியாவறு தேடும் குணாம்சம்.

இத்தகைய அவரது குணாம்சம் என்னை எப்பாடுபட்டாவது நேரத்திற்கு வீட்டில் நிற்க வைத்தது. அவருக்காகப் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தை என்னுள் விளைவித்தது. சமூகத்தை எண்ணிய திசைமாற்றங்கள் குறித்து மனம் சிந்தித்தாலும் 'அம்மா பாவம்' என்ற எண்ணம் அதற்கெல்லாம் தடை போட்டது.

எது எவ்வாறாயினும் என்தாய் எனக்கிட்ட அத்திபாரம் அவரறிந்த இராமாயணமாகவும் பாரதமாகவும் அமைந்தது. அவற்றுடன் தொடர்புடைய உப கதைகள் கிராம வழக்காறுகள் என்பன அம்மா வாயிலாக நான் பெற்றுக் கொண்ட பாடங்கள். அதுவே பின்னாள்களில் இலக்கியங்கள் சார்ந்த என் ஆர்வத்திற்கும் வித்திட்டது என் நினைக்கிறேன்.

தாயின் தனிப்பட்ட பாசப் பிணைப்பிற்குள் கட்டுண்டு கிடந்த எனக்கு சமூகப் பிணைப்பும் அதனுடன் கூடவே ஆர்வமாய் அமைந்த சொற்பொழிவுத் துறையும் வாழ்க்கையில் பல மாறுதல்களை ஏற்படுத்த உதவின.

சான்றோன் எனக் கேட்ட தாய் - ஈன்ற போழ்தில் பெரிது உவக்கும் என வள்ளுவர் குறிப்பிட்டமையை நினைத்துப் பார்க்கிறேன். சபையேறும் சந்தர்ப்பங்களில் "லலீசனின் அம்மாவா நீங்கள்" என்ற புகழ் மொழி என் தாயின் காதுகளில் குளிர்ச்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அம்மாவின் போக்கில் மாறுதல் ஏற்பட இதுவும் ஒரு காரணமோ என்று நான் எண்ணிப்பார்ப்பதுண்டு. "ஈன்ற போழ்தில் பெரிதுவக்கும் தாயாக நான் அவரைத் தரிசித்ததுண்டு.

ஒவ்வொருவருடைய வாழ்விலும் தாய் வகிக்கும் பங்கு தனித்துவமானது. ஒரே பிள்ளை என்ற பின்புலத்தில் கண்ணை இமை காப்பது போல என்னைக் காத்து நின்ற தாய் என்னைக் கணநேரங்கூடப் பிரிய முடியாதவராக விளங்கினார்.

அமுதூட்டும் நாள் முதல் தான் அறிந்த நீதிக் கதைகளைப் பொறுமையுடன் என்னுள் விதைத்த தாயின் பக்குவமே என்னை ஆளாக்கியது என்பேன். செட்டைக்குள் பொத்திக் காக்கும் சிட்டுப் போல எனது அன்னையும் பல்வேறு திசைமாற்றங்களில் இருந்து என்னைக் காத்தாள். இன்று நான் நானாக இருப்பதற்கு அடித்தளமிட்டாள்.

02.09.1937 இல் பிறந்த எனது தாய் திருமதி சந்திரமௌலீசன் நவமணி 13.12.2015 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். அம்மா மறைந்து ஐந்தாண்டுகளானாலும் இன்னும் நீங்கா நினைவுகளுடன் அவருடன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறேன்.



# என் அம்மாவின் தரிசனமாய்...



**திரு.வீ.கருணைலிங்கம்**
**(அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)**

“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்பதும் “தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை” என்பதும் நம் முன்னைய ஆன்றோர் வாக்கு.

தாய் என்பவள் மனிதர்களுக்கு மட்டுமன்றி சகல ஜீவராசிகளுக்கும் முக்கியமானவள். அம்மாவின் அன்பை நாம் விலை கொடுத்து வாங்கிவிட முடியாது. அந்த அன்புக்கு ஈடாக உலகில் எதுவும் கிடையாது. கடவுளுக்கும் மேலாக தாய்க்கு முதலிடம் கொடுக்கின்றோம். அவளே பிள்ளைகளை உலகிற்கு அறிமுகம் செய்து வைப்பவள். அதனாற்றான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற ஒழுங்குமுறை தோன்றியது.

“தாயினும் சாலப் பரிந்து நீ... என்றும்

“தாயிற் சிறந்த தயவான தத்துவனே! ஏன்றும் மாணிக்கவாசக சுவாமிகள் தாயைக் கடவுளுடன் ஒப்பிட்டுப் போற்றுகின்றார். அம்மா என்று அழைப்பதில் உள்ள சுகம், அதன் பலம் வேறு எதிலும் கிடையாது. அதனால் தான் அடியார்கள் இறைவனைத் தாயாக நினைத்து வழிபடுகின்றனர்.

“எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே” என்ற பாடல் வரிக்கு ஏற்ப சமுதாயத்திற்கு நல்ல மனிதர்களை உருவாக்கி வழங்குவது தாய் தான். எனவே என் தாயானவள் ஊனாகி, உடலாகி, உயிராகி உயிர் தந்த அம்மா! உடல் தந்து …. உதிரம் பெருக்கி ….. ஆணோ அல்லது பெண்ணோ என உருவறியாமல் உவகை பொங்க என்னைப் பெற்றெடுத்த அம்மாவை நினைக்கும் போதே மனம் கசியும், விழியோரம் கண்ணீர் பெருகும். வயிற்றுக்குள் இருக்கும் போது தொப்பூழ் கொடிவழி உணவூட்டி பிறந்த பின் பாலூட்டி வளர்த்த பின்னும் சீராட்டி பிள்ளைக்காகவே வாழும் மனித தெய்வம் தாயன்றி வேறுயார்! தனக்கென்று எதுவுமே வைத்துக் கொள்ளாத துறவியின் மனப்பக்குவம்…. தன் வயிறு காய்ந்தாலும் பிள்ளை வயிற்றை நிறைக்க துடிக்கும் கருணை எந்நேரமும் பிள்ளைகளைப் பற்றியே சிந்தனை …. மனிதப் பிறவிக்கு மட்டுமல்ல உலக உயிர்கள் அனைத்திற்கும் தாயே பிரதானம்.

அம்மா என் வாழ்விலே தன்னுடைய உடல்நிலை பற்றிக் கவலைப்படாமல் பிடிவாதமாக எனக்காக விரதம் இருப்பாள். ஏனெனில் நான் நன்றாக இருக்க வேண்டும் என்று எனக்கு ஏழு சகோதரர்கள் இருந்த போது அன்று பெரிதாக எந்தவொரு மகிழ்ச்சியையும் அனுபவித்தது கிடையாது. காரணம் குடும்பநிலை அம்மாவும் அதை பெரிதாக நினைப்பது கிடையாது. அம்மாவின் எண்ணம் முழுவதும் நாங்கள் நன்றாக இருந்தால் அதுவே அவர்களுக்கு மகிழ்ச்சி. தனிப்பட்ட முறையில் கிடைக்கும் மகிழ்ச்சியை விட அபாரம். எனக்கு, சிறு வயதில் இருந்தே என் அம்மாவை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. எனது தந்தையார் நோய் வாய்ப்பட்டிருந்த போது என் அன்னை அல்லும் பகலும் அயராது கஸ்ரப்பட்ட நிலைமையை நான் நன்கு அறிவேன். எதுவித பக்க உதவிகள் இல்லாத போதும் தனித்தொழிலாக கூலி வேலை செய்தே எம்மை வளர்க்க ஆரம்பித்தார். ஆரம்பத்திலே ஒரு சிறிய தேநீர்க் கடை அதன் மூலம் கிடைக்கும் சொற்ப வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை எந்த வித பழிச் சொல்லும் இல்லாது எம்மை வளர்த்தெடுத்த தாயை நினைத்து கண்கள் கலங்குகின்றன.

எனது பதினாறு வயதில் தந்தையை இழந்தேன் கடைசித் தங்கைக்கு இரண்டு வயது. மொத்தத்தில் ஏழு பேர் (என்னை விட) இந்நிலையில் தன் சிறு முயற்சியினாலும், மனத்தைரியத்தாலும் எமக்கு மூன்று நேர உணவையும் தந்து எம்மை அரவணைத்து வாழ்வை நகர்த்திச் சென்றார். இந்த உலகில் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் உள்ளார்ந்த அன்பின் வெளிப்பாடாய் இருப்பது ஒரு தாய் தன் சேய்மீது காட்டும் அன்பு.

நமது தாய் சொன்னால் தான் தந்தை யாரென்பது நமக்கே தெரியும். ஆனால் தாய் என்பது ஒரு நிதர்சனமான உண்மை. தாய்க்கும் சேய்க்கும் இயற்கையாகவே ஒரு பிணைப்பு இருக்கிறது. இந்த வேளையிலே நான் என் தாயை நினைத்துப் பார்க்கிறேன். அன்னை எனக்காகப்பட்ட துன்பங்களும் ஏற்றுக் கொண்ட தியாகங்களையும் என் விழியில் நிழலாடுகின்றன. நான் பாடசாலை போக ஆரம்பித்த நாட்களிலே கேள்விக்கணைகளால் துளைத்து எடுத்திருக்கின்றேன். அப்போதெல்லாம் ஒவ்வொரு முறையும் சலிப்படையாமல் என் உச்சி முகர்ந்து முத்தமிட்டு எனக்கு விடையளிப்பார். அப்போது அம்மாவின் ஸ்பரிசம் எனக்கு விளங்கவில்லை.

ஆண்டுகள் கழிந்தன. நானும் பெரியவனானேன். நண்பர்கள் வட்டமும் அதிகரித்தது. ஊர்சுற்றுவது இரவு வேளையில் வீடு திரும்புவது இதனால் எனக்காக கண்ணுறங்காமல் காத்திருந்து கதவைத் திறந்து சுகம் கேட்டு இரவுணவைத் தந்த நாட்களை எண்ணிப் பார்க்கின்றேன். காலஞ் செல்ல வந்தது அரச வேலை. எந்த வேலை என்று பாராமல் அம்மாவை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்பதற்காக உழைப்பின் ஆசையிலே வைத்தியசாலையில் சாதாரண பணியாளராக வேலை பார்த்தேன். படித்ததற்கேற்ப வேலை கிடைக்கவில்லை. செய்யும் தொழிலே தெய்வம் என்ற மனத்தைரியத்தோடு வேலையில் கண்ணும் கருத்துமாக கடமையைச் செவ்வனே செய்து வந்தேன். சம்பளம் கிடைக்கும் போது ஒரு சில நாள் லீவில் அம்மாவிடம் வந்து சகோதரர்களோடு பகிர்ந்து மகிழ்ச்சியாக குடும்பச் சுமைகளை தாக்குப்பிடித்தேன். அம்மாவின் தெய்வ பக்தியாலும் நேர்மைத் திறத்தினாலும் அம்மனின் அருளாசி எப்போதும் எம் வாழ்வில் துணையாக நின்றது. காலம் செல்ல என் தாயினுடைய இறை தியானத்தாலும் தெய்வ பக்தியாலும் ஆசிரியர் நியமனம் கிடைத்தது.

என் தாய் இதனால் கிடைத்த மகிழ்ச்சியினால் “கோயில் தரிசனம் கோடி புண்ணியம்” என தன் வாழ்நாளில் இறைவனைக் கையேந்தினாள். அம்மா துணையின்றிப்பட்ட கஸ்ரத்துக்கு யான் பெரும் பங்காற்ற வேண்டும் என்று ஆசிரியத் தொழிலை புனிதமாக ஏற்று பணியாற்றினேன். அம்மாவின் தெய்வகிருபையாலும் எனது முயற்சியினாலும் பட்டங்களை காலத்துக்குக் காலம் பெற்றுக் கொள்ள முடிந்தது. இந் நிலையில் ஏனைய சகோதரர்களும் அந்நிய தேசங்களிற்குச் செல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. எல்லோர் வாழ்க்கையிலும் ஓர் ஒளிமயமான எதிர்காலம் அமைந்தது. காலவோட்டத்தில் திருமணம் செய்து மகிழ்வித்தார். குறிப்பிட்ட காலம் என்னோடு ஒன்றாக இருந்து இரு பிள்ளைகளையும் கண்ணாரக் கண்டு கொஞ்சிக் குலாவி மகிழ்ந்திருந்த வேளையில் தங்கையினுடைய குடும்ப உதவியோடு வெளிநாடு செல்ல ஆயத்தமான போது என் தாய் இந்த நிலைமையில் என்னைப் பிரிந்து செல்ல முடியாத நிலை இருந்தது. நாட்டில் ஏற்பட்ட போர்க்கால சூழ்நிலையால் என் தாயை இதிலிருந்து விடுபட்டு நிம்மதியான இடம் தேடி அமைத்தும் கொடுக்க வேண்டும் என நயினைத் தாயை நினைத்த போது அம்மாவுக்கு வெளிநாட்டுப் பயணம் கைகூடியது. இதனால் ஐரோப்பிய நாட்டிற்கு புலம் பெயர்ந்து தற்போது சீரும் சிறப்புமாக வாழ்கின்றார்.

ஆனாலும் என்னுடைய எண்ணங்களும் என்னுடைய சிந்தனைகளுமே நாள் தோறும் மனதிலே ஊசலாடின. தொலைபேசி அழைப்பை தாமாகவே எடுத்து சுகம் விசாரித்து கண் கலங்குவார். தம்பி சாப்பிட்டாயா. வெய்யிலில் அதிகம் போகாதே, மோட்டார் சைக்கிளில் போய் வருவது கவனம், கண்டபடி ஒரு இடமும் திரிய வேண்டாம். என அடிக்கடி , திரும்பத்திரும்பக் கூறுவார். பிள்ளைகளைக் கவனமாகப் பார். கண்டபடி திரிய விட வேண்டாம் கவனமாய் இருக்கச் சொல் என்ற பொன் மொழிகளாலேயே எனக்கு அறிவூட்டுவார். சிறுவயதில் அம்மாவின் மீது வைத்திருந்த பாசத்தைவிட தற்போது வைத்திருக்கும் பாசம் அளவிட முடியாதது. காரணம் அது புரியாத வயது. இது அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும் வயது.

வயது அதிகமாக அதிகமாக அம்மாவின் மீது வைத்திருக்கும் மரியாதையும் பாசமும் அவள் என்மீது வைத்திருக்கும் பாசத்தால் அல்லது நடந்து கொள்ளும் முறையால் அதிகமாகிக் கொண்டே தான் செல்கிறதே தவிர கொஞ்சங்கூட குறையவில்லை. முன்பு அம்மா என்ற ஸ்தானத்தில் வைத்துப் பார்த்தேன். தற்போது கடவுளைப் போலப் பார்க்கின்றேன். அம்மாவின் அன்பை எதனோடும் அல்லது யாரோடும் ஒப்பிட முடியாது. கடவுளை யாருடனும் ஒப்பிட்டுப் பேச முடியுமா! எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாத நம் நலனை மட்டுமே சதா சர்வகாலமும் எண்ணிக் கொண்டிருக்கும் ஜீவன் இருக்குமானால் அது அம்மா மட்டுமே. தற்போதைய நிலையில் அம்மாவை நான் உடனிருந்து பார்க்கவில்லையே என்ற வருத்தம் என்னைத் தொடர்கிறது. அம்மாவுக்கு வேண்டிய ஆறுதல்களையும் பட்ட துன்பங்களையும் தற்போதுள்ள நிலமைகளையும் அருகில் இருந்து நாள்தோறும் கூடிக் குலாவிக் கழிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் என்னை வாட்டுகின்றது.

இன்று இந்த அன்பிற்காக ஏங்கும் பலரைப் பார்க்க முடிகின்ற இவ் வேளையில் இந்த அன்பு கிடைக்கப் பெற்றும் நம்மில் எத்தனை பேர் நமது தாயை நேசித்து இருக்கிறோம். இன்று எத்தனையோ பேர் பெற்ற தாயைப் புறந்தள்ளிவிட்டு சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர். பல தாய் தந்தையர்கள் அநாதரவாக விடப்படுகின்ற நிலமை மேலோங்குகின்றது. இன்று நம்மை முற்றுகையிட்டிருக்கும் நுகர்வுக் கலாசாரம் காலம் காலமாய் பேணிப் பாதுகாக்கப்பட்ட எமது பண்பாட்டின் வேர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் அரித்துக் கொண்டிருக்கிறது. உறவுகளின் மேன்மையை இன்றைய இளைஞர், யுவதிகள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. வுாழ்க்கை முழுக்க முழுக்க வணிகமயமாகிவிட்டது. இன்று பெற்றோரைக்கூட பெருஞ்சுமையாய்க் கருதும் மனப்போக்கு மலிந்துவிட்டது. தாயின் பெருமையும் தந்தையின் அருமையும் நம் பிள்ளைகளுக்குப் புரியாதபடி நம் கல்வித் திட்டம் தடம் மாறிவிட்டது. ‘‘ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்’’ என்று அன்றாடம் கற்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்கும் உலகநாதரின் உலகநீதி ஒவ்வொரு

பிள்ளையின் நெஞ்சிலும் ஜீவ ஊற்றாய் தாயன்பு ததும்ப வேண்டும் என்பதற்காக ‘‘மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம் ‘‘என்று ஓங்கி ஒலிக்கிறது. இப்போது படிக்கும் குழந்தைகளுக்கு தாயன்பு

பற்றிப் புரியாது. இனியாவது நாம் சிந்திப்பது நலம். தாயும் தந்தையுமே ஒருவனுக்கு இறுதிவரை உலகம் என்கின்றது புராணக்கதைகள். சமுதாயத்தினரே சிந்தியுங்கள் தாயை நேசியுங்கள் அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை என்பதனை உணருங்கள்.

அம்மா வாய்மை ஒன்றையே வாழ்வாகக் கொண்டு
பொறுமை என்பதன் இலக்கணமாய்
சேய்மை, அண்மை ஆகிய இரண்டிலும் நிறைந்து
தூய்மையான மனத்துடன் எந்தனைக் காத்து
மண்ணுலகில் பிறவி தந்து எனை ஈன்ற
விண்ணின் சுடராம் ஆதவனை நிகர்க்கும் அற்புதமே
கண்ணே என்றெனை தழுவிடும் தாயே
உந்தன் அன்பினை ஓங்கி உயர்ந்த மலையென்பேனா
தாங்கி நின்றிடும் பூமி என்பேனா
எந்தச் சொல் சொன்னாலும் அம்மா என்ற சொல்லுக்கு
எச் சொல் நிகராகும் என் தாயே இருகரம் கூப்பித்
தொழுகிறேன் நின்னையே! வாழும் நாளெல்லாம்
வாழ்வாங்கு வாழ்க!
‘‘அன்னையைப் போலொரு தெய்வமில்லை – அவர் அடிதொழ மறுப்பவர் மனிதரில்லை……….. மண்ணில் மனிதரில்லை’’



# என் உலகம் அம்மா



கொ.பாபு
(எழுத்தாளர், பிரத்தியேக ஆசிரியர்)

''அன்னை மடியில் தொடங்கிய வாழ்க்கை மண்ணின் மடியில் முடிகிறது. அந்த அன்னைக்கும் இந்த மண்ணிற்கும் இடையில்தான் மனிதவாழ்வு.''

நமது உதடுகள் இரண்டும் முத்தமிட்டு, ஆத்மாவைத் தொட்டு வெளிவரும் மூச்சுக்காற்றுத்தான். அம்மா என்ற அதிசக்தி வாய்ந்தசொல். தாய்மடியில் கிடந்து வளர்ந்த, ஒவ்வொருவரும் அறிந்து, உணர்ந்த சொல்லின்பம். தாய்ப்பாலுக்கென தனிமகத்துவம் உண்டு. குருதிச்சுற்றோட்டத்துள் அது எனக்குள் இன்னுமொரு பூமிதான்.

அறியாத பருவத்தில் அம்மாவை அறியாமல் விட்ட, வேதனையின்று எனக்குள் தொற்றி நிற்கிறது. அம்மாவின் சேலைத்தலைப்பை பிடித்துக்கொண்டு, அவள் பின்னே அழுதோடியது, இந்த பூமி எனக்கு வெறுமையாக தெரிந்த படியால் தான். அரிவரிவகுப்பும், பள்ளியும்,கல்வியும், கசந்தது, என்தாயைப்பிரிந்து நிற்கும் நேரங்களால்தான். தூரத்தில்நின்றாலும் என் அம்மா, என் கண்களுக்குள் நிற்க வேண்டுமல்லவா?

உலக நடப்பைஅறிந்து கொள்வதற்காகவும் என்னை ஒர் அறிவாளியாகவும், சமூகத்துள் மாறுதல்களை தோற்றுவிப்பதற்காகவும், எத்தனையோ நூல்கள்...... தேடிப்படித்தேன்.ஆனால்,.......... நான் முழுமையாக படிக்கத் தவறிய, ஒரே உயிருள்ள புத்தகம் என் அம்மா!

அவளை அறியாமையின் இருள் என்று நினைத்தேன்.நவநாகரீகத்தின் அழுக்கு உடை என எண்ணினேன். பாமரத்தனத்தின் வெறுமை எனக் கருதினேன். நான் அதிகாரமாய் கொதித்தபோது, அடக்கமாய் பேசுவாள். நான் அறிவாய்பேசியபோது,

உணர்வாய் உயிர்ப்பாய்பேசுவாள். நான் பொறுப்பில்லாத பிள்ளையாய் சுற்றிச் சுழன்ற வேளை, தனக்குள் ஊமையாய் அழுதுகொள்வாள்.

என் தாய்க்குள் உறங்கிக் கிடந்த குணநலன்கள் . பண்புகள் இது போன்ற பல ஞான வெளிச்சங்கள், மானுட விழுமிய உணர்வுகளை எனக்குள் எப்படி வேர் பிடிக்க வைத்தாள். அழுத்தித்திணிக்காது வாழ்வை பற்றிக் கற்பிக்க, அம்மாவால் மட்டுமே முடிந்தது. தாயைப்பற்றி கவிஞர் வைரமுத்து வடித்த கவிவரிகள், சில கண்ணீர் துளிகள் மட்டுமே. ஆயினும், அது சரிதையாகாது. பொய்மையில்லாத உழைப்பு, உபசரிப்பு, பாசம், மகிழ்ச்சி மாதா இவள் சரீரத்துள். வாழ்வையும், வாழவும் கற்றுத்தந்த முதல் ஆசான். பிறருக்காக தன்னை இசைவாக்கிக் கொள்ளும் ஒரே உயிர். அன்பு, பந்தபாசம், இரக்கம், கருணை என்னும், மானுட விழுமியம் சார்ந்த வற்றாத நதி.

விமர்சிக்கவோ, திறனாய்வு செய்யவோ, ஒப்புநோக்கவோ அம்மா ஒன்றும், சடமான புத்தகமல்ல. நடைமுறை மூலம் வாழ்ந்து காட்டிய கல்விக்கூடம். எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும், அழகு தரும், கலை அரங்கம். எப்போதும் எனக்கு வாழ்த்துமடல் மட்டுமே.

மனித வரலாற்றில் தாய் வழிச் சமூகமே, சமத்துவமும் பொதுமையும் மிக்கதாக காணப்படுவதை பகுப்பாய்வு மூலம் இனங்காண்கின்றோம். முட்டையிட்டு குஞ்சுபொரிக்கும் பறவைகள் தொடக்கம் பாலூட்டிகள் வரை, தமது குஞ்சுகள், குட்டிகள் என்பவற்றுக்கு பாதுகாப்பு, பராமரிப்பு, உணவூட்டல் என்பவற்றில் அக்கறை கொள்வதை காணமுடியும். வெவ்வேறு கலாச்சார மட்டங்கள் பிராந்தியங்கள், கண்டங்கள் எங்கும் தாய்மையின் பொதுமைப் பண்புகளைக் காணமுடியும்.

பண்டைய இந்திய தாய்வழிச்சமூகத்தை அறிந்து வைத்தபடியால் தான், திருவள்ளுவரின் பொதுமைசிந்தனை, திருக்குறளாய் தலைஉயர பிரதான காரணம். ஔவையின் நூல்கள் பலவற்றுள்ளும் இதன் செல்வாக்கைக் காணமுடியும். அம்மா என்பது அரும்பெரும் சொத்து. கற்றுத்தந்த பாடங்கள், கற்கவேண்டிய பாடங்கள் மிகஅதிகம். தாய் இருந்தபோது தாய்மையின் முழுப்பரிமாணத்தை அறியவில்லை. அதனை அறியமுனையும் போது, தாய் இல்லை. மானுட வாழ்வின்

கொடுந்துயர்களில் ஒன்று, தாயையும், தாய்அன்பையும் இழப்பது. ஆயிரம் உறவுகள் வந்து போகும். ஆனால், தாயையும், தாய் அன்பையும் இழந்தால், தமது ஆத்மாவையே இழந்து விடுகின்றனர்!

சிறியதொரு சும்மாட்டின் மேல் , கஞ்சிக்கலயமும் ,நிறைகுடத்தண்ணீரும், விறகுக் கட்டும்சுமந்த தலை. அடுப்போடும், நெருப்போடும், வீட்டோடும், கமத்தோடும் ஊடாடிய உடல். களைபிடுங்கி நாற்றுநட்டு, வரப்போரம் தளிர்விட்ட பொன்னாங்காணிக் கீரை பறித்த விரல்கள்.

அம்மிதேய்ந்தது, உரலும்தேய்ந்தது, அவளும்தேய்ந்தாள். இளகிய மனசும், பாமரத்தனமும் தான், தாய்மனசுக்குள் குடியிருக்கும் உண்மை, நீதி, நியாயங்களில் அவள் எவெரஸ்ட். பாசப்பிணைப்பில் பசுபிக் சமுத்திரம். நேற்றிருந்த தாய்போல இன்றும் என்றும்.தாய்மை ஒன்றே மாறாதது.அம்மா பற்றி எண்ணும் போதும், எழுதும்போதும் தான், எனக்குள் கற்பனையில்லா, வெறும் புகழ்ச்சியில்லா, புனைவில்லா, நவிற்சிஅணிகள் இல்லா, எழுத்து வரிகள் குதிரைக் குட்டிகள் போல் குதித்துத்தாவியோடி வரும்.

தொப்புள் கொடி உறவாய் தொட்டினிலே வளர்த்து, துயர் துடைத்துப்பார்த்து, தன் முதுமையில் சொந்த பந்தங்களால் பந்தாடப்பட்டு, அவலத்துள் அழுந்தும் அம்மா, நமக்கு சுகமா? சுமையா? நஸ்டமா? கேளீர் மானிடரே! சொத்துப்பத்துக்களா? தாயா நிழலா நமக்கு மனச்சாந்தி தரத்தக்கது?

உடல் நொந்து, உயிர் கசிந்து, சொல்கிறேன். உலக வளர்ச்சியின், உச்சாணிக்கொப்பில் நின்று, கணினிப் பொறியில் தேடிப்பார்த்தாலும், அம்மா என்ற ஆத்மார்த்த இதயத்தை, மனித மூளையால் அளந்து விட முடியாது. என் தாயின் குருதியும், குண இயல்புகளும் தான், என்னை ஒரு நல்ல மானிடனாய், இந்த உலகிற்கு அறிமுகமாக்கியது. மௌனமொழி அதிகம் பேசும் அன்னையின் வார்த்தைகளும், வாழ்த்துக்களும் தான், என் வாழ்க்கையின் மகிழ்ச்சிகடல். இந்தப் பூமியை வசீகரிப்பதும் தாய்மையே. எல்லாப் பெருமையும் தாய்மைக்கே உரித்தாகட்டும்.



# அம்மா ஒரு பல்கலைக்கழகம்



**திருமதி இ.சீர்பாதம்**
**(உப பீடாதிபதி, சிறிபாத தேசிய கல்வியியற் கல்லூரி, பத்தனை)**

அவர் இரண்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்திருக்கிறார். “ஈஸ்வரி அம்மா” என்று ஒற்றை எழுத்துக்களால் கையொப்பம் வைப்பார். தினசரி கணக்கு வழக்குகளை மனக் கணக்குமூலமாகவே கூறுவார். ரொம்பவும் அழகானவர். தூய்மையாகவும் நேர்த்தியாகவும் இருப்பார் சாப்பிட்ட பின்னர் சுடுநீர் அருந்துவது அவர் வழக்கம். நேரத்திற்கு வேலைகளை முடித்து விடுவார். சேலை தான் அவரது உடை.

ஆம்! அவர் தான் எனது அன்பான அம்மா என் குடும்பத்தில் மொத்தம் பத்துப் பிள்ளைகள். நான் பத்தாவது. அம்மாச் செல்லம் எம் எல்லோருக்குமே ஐயாவை விட அம்மாவைத்தான் அதிகம் பிடிக்கும். மற்ற பிள்ளைகளை விட நான் அம்மாவிடம் ஒட்டிக் கொள்வதும் பகிர்ந்து கொள்வதும் அதிகம் அதிகம்.... இன்று நான் விரிவுரையாளர் ஸ்தானத்தில் கௌரவமான ஒருத்தியாக சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்றால் அதற்கு என் அம்மா தான் காரணம். அவரிடமிருந்த நல்ல பழக்க வழக்கம் மற்றும் வழிநடத்தலால் தான் இன்று நான் இப்படியான ஆளுமையில் இருக்கிறேன் அது எனக்குப் பெருமையாகவும் இருக்கிறது.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவருடன் கைகோர்த்துத் திரிவேன். அவர்தான் என் உலகமாக இருந்தார். நான் சிறு பிள்ளையாக இருந்த போது அம்மாவிடம் அடி வாங்கியிருக்கிறேன். அடித்து விட்டு என்னை அணைத்து “நீ நல்ல பிள்ளையாக வர வேண்டும் என்பதற்காகத்தான் உன்னை அடித்தேன். என்று ஆறுதலுடன் புத்தி கூறுவார். வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக் கொடுத்த ஆசானாக அவரைக் காண்கின்றேன்.

ஒரு முறை சப்பாத்து வாங்கச் சென்ற இடத்தில் கடைக்காரர் 80 சதம் மீதிப் பணத்தை மிகையாகக் கொடுத்து விட்டார் (அந்தக் காலத்தில் 80சதம் என்பது பெறுமதியான காசு) நானும் வாங்கினேன் அதனை அம்மாவிடம்

சொன்னபோது ‘‘பிறருக்குச் சொந்தமான பொருளை நாம் வைத்திருக்கக் கூடாது என்று சொல்லி மீண்டும் என்னை கடைக்கு அனுப்பினார். நாணயமாக நடக்க வேண்டும் என்பதற்காக இதை விட வேறு பாடம் வேண்டுமா என்ன! அது போல பொய் பேசினால் ‘‘சாமி வந்து வேலால் குத்துவார்’’ பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடையாது என்ற புராணக் கதைகளைக் கூறி எம்மை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

நான் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்ததாக ஞாபகம் ஒரு நாள் ' வீட்டு வாசலில் இருந்து கதைத்துக் கொண்டிருந்தோம். வானத்தில் பறந்து கொண்டிருந்த ஏரோப்பிளேனைப் பார்த்து ‘‘இதோ பார் அந்தப் பிளேனிலிருந்து வருகின்ற புகை எமக்கெல்லாம் வருத்தத்தைக் கொடுக்கும்’’ என்று அவர் கூற நான் கை கொட்டிச் சிரித்து விட்டேன். ‘‘ எப்படி அம்மா வானத்தில் பறக்கின்ற ஏரோப்பிளேனால் எங்களுக்கு வருத்தம் வரும்’’ என்றேன். அன்று அவர் தீர்க்கதரிசனமாகக் கூறிய அந்த வார்த்தைகளை இன்று நாம் நேரடியாக அனுபவிக்கும் போது அவரது அறிவைக் கண்டு நான் வியந்து போயிருக்கின்றேன்.

சிறு வயதிலிருந்தே நான் கதைப் புத்தகம் வாசிப்பேன். என் வாசிப்பை ஒரு போதும் அவர் தடுத்ததில்லை. இரவில் படுக்கைக்கு போகும் போது அன்று வாசித்த கதையை அவருக்கு கூற வேண்டும். மிக ஆவலாக கதை கேட்பார். நகைச்சுவை பிரியர் வேறு. சில கதைகளைக் கேட்டு இரசிப்பார். அது போன்று பரீட்சை நடைபெறுகின்ற காலங்களில் நான் படித்த பாடங்களை அவர் முன்னிலையில் அறிவிக்க வேண்டும் அதை ஆர்வத்துடன் அவதானித்து செவிமடுப்பார். நான் வளர்ந்து பெரியவளாகி திருமணம் முடித்து கணவர் வீட்டிற்குச் செல்லும் வரை அம்மாவிடம் கதை கேட்கும் பழக்கம் இருந்து வந்தது சிறு வயதில் அம்புலிமாமாவில் ஆரம்பித்து நான் கட்டிளமைப் பருவத்தை அடைந்த பின்னர். மு.வரதராசனின் நாவல் கதைவரை விமர்சனம் செய்யும் வழக்கம் இருந்தது. அந்த நேரத்தில் வேலைகளை மறந்து கதாபாத்திரங்களில் ஒன்றிப் போய்விடுவோம். நாம் இருவரும் நண்பிகளாக இருப்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்படும்.

இன்றைய காலத்தில் பெண் பிள்ளைகள் கற்றுக் கொள்வதற்காக சமையல் வகுப்புகளுக்குப் போகிறார்கள். இதைப் பார்க்க சிரிப்புதான் வருகிறது. எங்களுக்கெல்லாம் அம்மா தான் ‘ஹோம் சயன்ஸ் டீச்சர்’ மாலை வேளைகளில் தேநீருக்கான சிற்றுண்டிகளை தயாரிக்க வேண்டும் கறி வகைகளும் அப்படித்தான் சமைத்து

முடிந்த பின்னர் அதில் என்ன குறை இருந்தாலும் குற்றம் சொல்ல மாட்டார். பரவாயில்லை போகப் போகப் பழக்கத்தில் வந்து விடும்'' என்று பாராட்டுவார்.

உணவு வகைகளை குடும்ப அங்கத்தவர்களுக்கு சமமாக பகிரும் பொறுப்பை என்னிடம் கொடுத்து பகிரும் பழக்கத்தை சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

என் அம்மாவின் ஒரு பழக்கத்தை இன்றும் எனது சக விரிவுரையாளரிடம் கூறி வியப்பதுண்டு நம் வீட்டில் கோழி வளர்த்த போது, தினமும் இடுகின்ற முட்டைகளைத் 'தினத்திற்கு ஏற்றவாறு பென்சிலால் இலக்கமிட்டு வைத்திருப்பார். சமையலுக்காக முட்டைகளை எடுக்கும் போது முதலில் இட்ட முட்டைகளைப் பயன்படுத்தும் நோக்கத்திலேயே அவ்வாறு ஒழுங்குபடுத்தினார். என்ன அறிவு... என்ன அறிவு அந்தக் காலத்தில் அடக்குமுறை இல்லாதிருந்திருந்தால் என் அம்மா எவ்வளவு படித்திருப்பார்.

இப்படியாக நான் அம்மாவிடம் கற்றுக் கொண்டது ஏராளம்.... ஏராளம்...!

நான் பல்கலைக்கழகம் சென்ற போது அம்மாவைப் பிரிவது மிகப் பெரிய ஏக்கமாக இருந்தது. அவரது ஞாபகங்களை எனக்குள் வைத்துக் கொள்வதாக நினைத்துக் கொண்டு அவர் அணிந்த சேலைகளை உடன் எடுத்துச் சென்று போர்த்திக் கொள்வேன். அதில் என் அம்மாவின் வாசம் கலந்திருக்கும். அம்மாவின் மடியில் படுத்திருக்கும் உணர்வு உண்டாகும்.

என் திருமணத்திற்காக வரன் தேடும் போது அவர் கூறுவார் ''நானே இரண்டாம் வகுப்பு படித்து விட்டு நல்ல இங்கிலீஸ் படித்த உங்கள் ஐயாவைக் கல்யாணம் செய்திருக்கிறேன். பட்டதாரியான என் புஸ்பாவுக்கு (புஸ்பா எனது செல்லப் பெயர்) நல்லா இங்கிலீஸ் படித்த மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டும்'' என்பார்.

அவர் விரும்பிய படியே இங்கிலீஸ் படித்த மாப்பிள்ளைக்கு என்னை மணம் முடித்துக் கொடுத்தார்கள் நான் வீட்டை விட்டு கணவர் வீடு செல்லும் போது 'ஓ ----' வென்று கதறி அழுதேன் அம்மாவை விட்டு பிரிவது

நெஞ்சுக்குள் ஏதேதோ செய்தது. அதெல்லாம் நாமாக உணர வேண்டியவை பாசத்தை வார்த்தைகளால் விபரிக்க முடியுமா என்ன!

திருமணத்தின் பின்னர் மாதம் ஒரு முறையேனும் அம்மாவைப் பார்க்கச் சென்று விடுவோம். அந்த நாட்களில் இருந்த வீட்டுச் சம்பவங்களை அவருடன் பகிர்ந்து கொள்வேன் சிலர் விரும்புகின்ற உணவு வகைகளை என் கைளால் சமைத்துக் கொடுத்து விட்டு மீண்டும் கணவர் வீட்டிற்கு வந்து விடுவோம்.

என் மகன் பிறந்த போது என்னைப் பார்த்துக் கொண்டார். என் மகனுக்கு இரண்டு வயதாக இருந்த போது என் ஐயா நோய் காரணமாக இறந்து போனார். ….. வீட்டில் ஐயா இறந்ததை விடவும் அம்மாவின் பொட்டினைப் பறிகொடுத்துவிட்டது குறித்தே நான் ரொம்பவும் கவலைப்பட்டேன்.

கணவர் வீட்டிலிருந்து நான் அடுத்த கட்ட கற்கை நெறிகளைப் பயின்றபோது தூரத்திலிருந்தே ஊக்கமளித்தார். என் மகள் பிறக்கவிருந்த போது அம்மா என்னுடனேயே வந்திருந்தார். பிரசவத்தில் நான் ரொம்பவும் கஸ்டப்பட்டேன். அப்போது அம்மா தான் 'நர்ஸ்' மாதிரி எனக்கு பணிவிடைகள் செய்தார்.

காலம் ஓடிக்கொண்டே இருந்தது. 2007ஆம் ஆண்டு கற்கைநெறியொன்றுக்காக ஆறு மாதங்கள் பயணம் சொல்லிவிட்டுச் சென்றேன். மீண்டும் வந்து மறு தினமே அம்மாவைக் காணச் சென்றிருந்தேன். "இனி தூரத்திற்கு போகாதே. படித்தது போதும் என்று ஏக்கமாக கதைத்தார்கள். முதுமை அதிகமாகி விட்டது நடந்து திரிந்தாலும் அவர்களுக்கென துணை தேவைப்பட்டது.

2008ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அவரை ஆஸ்பத்திரியில் 'அட்மிட்" செய்திருப்பதாக தகவல் வந்தது. உடனே ஓடிவிட்டேன். அன்று முழுவதும் ஆஸ்பத்திரியில் அம்மாவுடன் தங்கியிருந்தேன். அவர் விடிய விடியத் தூங்கவில்லை. வாழ்க்கைச் சம்பவங்கள் பலவற்றை என்னிடம் கூறிக்கொண்டிருந்தார். என்னைக் கண்ணயர விடாது கூப்பிட்டுக் கூப்பிட்டுக் கதைத்து கொண்டே இருந்தார்.

கரண்டியால் தான் உணவு பருக்க வேண்டியிருந்தது.'' நான் எவ்வளவு மெலிந்து விட்டேன். இந்த வயிற்றிலிருந்து தானே நீ பிறந்தாய்! என் வயிறு எவ்வளவு ஒட்டிப் போய்விட்டது.'' என்று தனது ஒட்டிய வயிற்றைத் தொட்டுக் காட்டினார். நான் அழுதேன். அம்மாவைக் கொஞ்சி முத்தமிட்டேன். எனக்கு ஓய்வு கொடுத்து விட்டு என் அக்கா அன்று அவருடன் தங்கினார். இரவு 10மணியிருக்கும் அம்மா எங்களை விட்டுப் பிரிந்த செய்தி வந்தது. என் மகளைக் கூட்டிக் கொண்டு கதறியபடி ஓடினேன். 86 வயதானாலும் அந்த தாய் மடியில் தலை வைத்து உறங்கும் பாக்கியம் இனி ஒரு போதும் எனக்கு கிடைக்கப் போவதில்லை.

இன்று என் அம்மா இறந்து பத்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அவரது நினைவுகளை மீட்டுத் தரும் ஊடகமாக என் மகளைக் காண்கின்றேன். ''அம்மா வாசம்'' என் மகளிடத்தில் இருக்கிறது. இன்று அவள் பல்கலைக்கழகத்தில விரிவுரையாளர் எனினும் தூங்கும் போது என்னை அணைத்துக் கொண்டு 'ராஜா கதை சொல்லுங்கள்'' என்று கேட்பாள். அம்மாவுக்கு செய்ய முடியாது போன பல கடமைகளை என் மகளுக்குச் செய்கின்றேன். இவளுள் அவரைக் காண நினைக்கிறேன். மீண்டும் என் அன்னை வர மாட்டாரா….?



# எனது வாழ்வில் ஒரு நாள்



**திரு.த.மோகன்**
**(விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்)**

**19/10/2019**

அதிகாலை இரண்டு மணி இருக்கும். 'மோகன்' என்று எனது அம்மா அழைப்பது போன்றதோர் உணர்வு. திடுக்குற்று எழுகிறேன். 'அம்மா' என்று அழைத்தவாறு பின் வாசல் பக்கம் ஓடுகிறேன். வாசலில் அம்மா கீழே விழுந்து கிடக்கிறாள். அதிர்ச்சி அடைந்தவனாய் 'அம்மா பாம்பு ஏதும் கடித்துவிட்டதா' என அவரைப் பற்றியபடி வினவுகிறேன். 'இல்லை, எனது ஒரு கையும் காலும் விளங்கவில்லை' என இளைக்க இளைக்கக் கூறினார்.

அம்மாவுக்குப் பாரிசவாதம் ஏற்பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொண்டவனாய் அம்மாவைத் தாங்கியபடி கட்டிலில் படுக்கவைக்கிறேன். அவசர 'அம்புலன்ஸ்' வண்டியின் உதவியுடன் பருத்தித்துறைப்பிரதேச வைத்தியசாலையிலும் பின்னர் யாழ்ப்பாண வைத்தியசாலையிலும் அம்மாவை அனுமதித்தேன். உயர் இரத்த அழுத்தம் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது என வைத்தியர்கள் கூறினர். இதற்கு நானும் ஓர் காரணமாகிவிட்டேன் என்பதை முன்னரே நான் உணரத் தவறி விட்டேன்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் கல்லூரியிலிருந்து வீடு திரும்பும் வழியில் நாயுடன் மோதுண்டு காயங்களுக்கு உள்ளாகியிருந்தேன். காயங்கள் பெரிதாக இல்லாதுவிடினும் எனது தாயின் உள்ளத்தை அச்சம்பவம் மிகவும் பாதித்து இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தியிருந்தது என்பதை நான் பின்னரே உணர்ந்தேன்.

வைத்தியசாலையில் எனது தாயின் கூந்தலைக் கூட முடிந்து விட முடியாத நிலையில் நான் மிகவும் வேதனைப்பட்ட வேளையிலும் நோயாளர் காவு வண்டியில் அமர்ந்த படி என்னை அருகில் அழைத்து எனது தலையைத் தடவிய படி 'சாப்பிட்டியா? என்னால் உனக்கு எவ்வளவு கஸ்டம்?' என்று புலம்பியமை எனது கண்களில் நீரை வரவழைத்தது.

தனது துன்பத்திலும் தனது பிள்ளையைப் பற்றியே எண்ணி எங்கும் தாயுள்ளத்துக்கு நிகரேது.



# என்னைச் செதுக்கிய என் அம்மா

திரு.ம.சத்தியகுமார்
(விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



தனது இரத்தமும், சதையும் கொண்டென்னை தனக்குள் உருவாக்கி உயிர் கொடுத்து பெற்றெடுத்து நல்ல அன்பும் உணவும் ஊட்டி எனை வளர்த்து கல்வியிலே நாட்டல் கொள்ள வைத்து நல்லதொரு ஆசிரியனாய் எனை ஆக்கிய பெருமையின் பெருமிதத்தால் என் அம்மா.

தான் கற்றது ஐந்தாம் வகுப்பு வரை என்றாலும் தமிழர் தம் மரபு வழித் தமிழ்க் கல்வியின் பொக்கிசமாய் திகழும் எனது அம்மாவின் ஆற்றலும் அறிவும் எவ்வளவு திடமானது என்பதனை எனது கல்வி ஆர்வத்திலும் கல்வி வளர்ச்சியிலும் கண்டு கொண்டேன்.

முறையான கல்விக்காய் பாடசாலை செல்லத் தயாராகும் போது தலையை வாரிவிட்டு அழகு பார்த்து வழி அனுப்பி வைப்பது எந்தத் தாய்க்கும் இனிமையானது அப்பொழுதெல்லாம் தலையை வாரி வாரி எனது அம்மா கூறும் வார்த்தைகள் எப்பொழுதும் என் காதில் ஒலிக்கும் மந்திரமாக இருக்கும் ‘‘பாதையிலே கவனம் வேண்டும். நண்பர்கள் எத்தனை பேர் இருந்தாலும் எத்தகைய நண்பன் உனக்குத் தேவை என்பதைக் கவனத்தில் கொள் யாரிடமும் இரக்கம் கொள்ளும் படியாக எதனையும் கூறி விடாதே’’ என்று கூறி அனுப்பி வைப்பார். அதுவே இப்போதும் எனது வாழ்க்கைக்கு ஆதரவாக உள்ள மந்திரம். கொடுப்பதில் தான் சந்தோசம் உள்ளது. நீ நல்லது என்று என்று எதனைக் கருதுகிறாயோ அதனை மற்றவர்களுக்கும் கொடு என்பார். உன்னால் பொருளுதவி செய்ய முடியாவிட்டால் பரவாயில்லை சரீர (உடலால்) உதவி செய் என்பார். இந்த வார்த்தைகள் எப்போதுமே என்னை வழிநடத்தும் வார்த்தைகளாக என்னோடு பயணித்து வருவதை நன்றாக உணர்கிறேன்.

ஐயா வாங்கித் தரும் பயிற்சிக்  கொப்பிகளுக்கும், பாடப் புத்தகங்களும் அழகாக காட்டுத் தாளினால் உறைபோட்டு அதன் மேல் வர்ணப் பென்சில்களால் பல வடிவங்கள் வரைந்து அதற்குக் கீழே அழகாக எனது பெயரை தமிழிலே உறுப்பாக எழுதி அடுக்கி வைத்து விடுவார். புதுக்கொப்பி, புதுப்புத்தகம், புதிய பை, ஆகா இவை அனைத்தும் இணைந்திருக்கும் போது ஏற்படும் வாசனை எனது அம்மாவின் கைகளால் போடப்பட்ட உறையினாலும் வரையப்பட்ட வண்ண வண்ண வடிவங்களினாலும் அழகை, வாசனையை முகர்ந்து பார்த்துப் பார்த்து ஆனந்தத்தில் திழைத்து பாடசாலைக்குச் சென்று கற்பது எப்போதுமே கல்வியை மகிழ்வான கற்றலாக மாற்றித் தந்தது.

எனது அம்மா தனது இரத்தத்தாலும் சதையாலும் எப்படி என்னை உருவாக்கினாரோ அதே போன்று தனது கைகளாலும் சிந்தனையாலும் கல்வியை எனக்கு உருவாக்கித் தந்தார். எப்போதும் மகிழ்ச்சியே இருக்கும் என்பதில்லை துன்பங்களின் மத்தியிலும் வாழ்வு பயணிக்கும் போது தனது அன்பினால் துன்பங்களை போக்கி விடுவார். கல்வியில் தடைகள் வந்த போதும் அதைத் தாண்டிச் செல்லும் பக்குவத்தைத் கற்றுந் தந்தார்.

கட்டுரை எழுத, வசனம் அமைத்துத் தருவார். கைவேலை என்றால் பூக்களும், சாடியும் பன்ன வேலைகள் செய்வதும் சொல்லித் தருவார், செய்து தருவார் மண்ணிலே அமர்ந்து விட்டால் தனது கைகளால் எத்தனை விந்தைகளை மண்ணின் மேற்பரப்பிலே செய்து காட்டுவார். விலங்குகள் பறவைகளின் உருவங்கள், கால் தடங்கள் என நான் கற்றது ஏராளம். கல்வித் தாய் எனது அம்மா என் கல்வியே என் தாய் தான் எப்போதும் எனது கற்றலும் கற்பித்தலும் எனது தாயின் வார்தைகளிலிருந்து விரிந்து வளர்ந்து செல்வதனையே நான் உணர்கின்றேன்.

எனக்காக எனது ஆசிரியரை பாடசாலை அதிபரைச் சந்திப்பார் தனது ஆசையைக் கூறுவார். அதிபரின் வாக்குறுதியை ஏற்று தொடர்ந்தும் ஒரே பாடசாலையிலே நான் கற்பதற்கு உறுதியாக என்னை வழிநடத்தினார். என்னை நடனமாட வைத்து பார்த்து இரசிப்பார். நடனத்தின் மீதான என் ஆசையை உணர்ந்து ஆண்கள் நடனம் பயில்வதா என்று கேட்கும்

பல பேரிடம் எனது ஆசையை பூரணமாக நிறைவேற்றினார். எனது தொழில் வாழ்க்கைக்கு இவையாவும் எத்துணை வகையில் துணை செய்கின்றது. என்பதனை நான் எனது அனுபவமாக உணர்கின்ற போது என்தாய் போல் வருமா? என்று எண்ணுவேன் எனது அம்மாவின் உண்மையும் ஒழுக்கமும் வாழ்ந்து காட்டும் விதமும் என்னை ஒரு நிதானமான மனிதனாக ஆக்கித் தந்துள்ளது. அதற்கு என் தாய்க்கு நான் எதனைச் செய்தாலும் இது ஈடாகாது. கல்வியின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் எனது அம்மா நீக்கமற நிறைந்திருப்பதனை உணரும் போது நான் அடையும் பெருமிதம் யாராலும் புரிந்து கொள்ள முடியாது.

எனது மூளையை மூளை நரம்புகளை அவயங்களை எவ்வளவு கண்ணும் கருத்துமாய் பாதுகாத்தார் எனது அறிவில் தொன்மங்களின் சிந்தனைக்கு வித்திட்டும் எனது தொன்மங்களின் தொகுப்பில் பொருத்தமான கல்விக்கு ஏற்ற தொன்மத்தை புகுத்தி இருத்தி விட்டார். அது எவ்வாறெல்லாம் என்னை சிந்திக்க வைத்து மீஅறிகையாகி என்னை புளகாங்கிதம் அடையச் செய்கின்றது. அம்மா எனது நன்றியை நாளும் சொல்கின்றேன்.

தமிழ்மொழியை தமிழ்ப் பண்பாட்டால் தமிழ் உணர்வால் வாழ்கிறேன் என்றால் அது அம்மா எனக்கு போட்ட பிச்சை எதுவும் கொடுக்காமல், எதுவித எதிர்பார்ப்பும் இல்லாமல் எனக்களித்த பிச்சைக்கு வாழக் கற்றுக் கொடுத்து நல்ல குழந்தையாய் நல்ல பிள்ளையாய் நல்ல மாணாக்கனாய் நல்ல தந்தையாய் கணவனாய், ஆசானாய், திருவுடையாளனாய் வாழ்கின்றேன்.

அம்மாவின் மகத்துவம் போற்றி வாழும் வாழ்வு என்றும் தாழ்ந்து போகாது.



# அம்மாவின் நினைவுகள்



**திரு.ஞா.இரத்தினசிங்கம்**

**(விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)**

கட்டுடை மற்றும் சண்டிலிப்பாய் என்னும் இரண்டு ஊர்களுக்கும் இடையில் சீரணிக் கோயிலின் தீர்த்தக் கேணிப் பக்கமாகக் காணப்படும் வயல் வெளிகள் எமக்கு நல்ல அத்துப்படி. சண்டிலிப்பாயில் எமது வீடு (கல் வீடல்ல) அமைந்திருந்தது. புடிக்கும் பாடசாலையோ கட்டுடை சைவ வித்தியாசாலை. நான்காம் ஐந்தாம் தரங்கள் அங்கு தான் நிறைவு செய்யப்பட்டன. வகுப்புகள் ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாம் வகுப்புவரை சண்டிலிப்பாய் சாந்தி நிகேதன வித்தியாசாலையில் நடைபெற்றது. இரண்டரை மைல் தூரம் நடப்பதினை ஒப்பிட்டுக் கட்டுடை சைவ வித்தியாசாலைக்கு இடமாற்றம். சண்டிலிப்பாய் ஐயனார் கோவில் பின்பக்கமாக சுமார் அரை மைல் தூரத்தில் தான் வீடு.இது இரண்டு மைல் தூரம். காலையில் வயல் வெளியூடாக நடந்து அண்ணா மற்றும் அண்ணனின் நண்பர்கள் சிலருடன் நடந்து செல்ல வேண்டும். நடுவில் வழுக்கையாறு குறுக்கிடும். அதன் அகன்ற பாதையூடாக நீரினுள் நடந்து செல்வது மிகுந்த பயங்கரமாக இருக்கும். ஏப்போதோ ஓர் நாள் கண்ட பாம்பு ஞாபகத்தில் வந்து விடும். அதை நினைத்துக் கொண்டு செல்லும்போது வழுக்கி விழுத்திவிடும்.

ஒரு நாள் வழுக்கி விழுந்து தெப்பமாக நனைந்து விட்டேன். புத்தகங்களும் நனைந்து விட்டன. அண்ணா என்னைப் ‘‘பள்ளிக்கூடம் வர வேண்டாம். வீட்டுக்குத் திரும்பிப்போ’’ என்று அனுப்பி விட்டான். அண்ணா என்னை ஆற்றுக்கு அப்பால் கொண்டு வந்து விட்டு விட்டு மீண்டும் சண்டிலிப்பாய் ராஜா பாடசாலைக்குச் செல்ல வேண்டும். (தற்போதய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.) எல்லோரும் நடையில்தான். மறுநாள் தான் பிரச்சினை தொடங்கியது. புாடசாலைக்கு வராது விட்டால் அதிபர் அண்ணாமலையான் அடிக்க அடிக்க மலம் போகும். பொல்லாத மனுசன்.

யாரோ பிழையாக சண்முகம் மாஸ்டரை அண்ணாமலையான் என எனக்குக் கருத்தேற்றம் செய்து விட்டிருந்தனர். நமச்சிவாயப் பதிகத்தினை கூறி அதில் வரும் அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும் என்பதனை தவறாக

விளக்கி மனதில் படிமம் எற்பட்டிருந்தது. (அவருக்குப் பெயர் சண்முகம் மாஸ்டர் என்பது பின்பு தான் தெரியும்.) நேற்று வராமைக்கான காரணம் வழுக்கையாற்றில் வழக்கி விழுந்தது எனபதனை அண்ணாமலையான் நம்பத் தயாரில்லை.

நடு மண்டபத்தில் விட்டு சுழரச்சுழர அடி. இம்மை மறுமையில்லாத அடி. மூன்று வளமுமிருந்த வகுப்பு மாணவர்கள் பார்த்து நையாண்டி பண்ண எனது கையை தனது ஒரு கையால் பிடித்தபடி பின்னி எடுத்துவிட்டான் பாவி. குண்டி புளிக்க அடியென்பார்களே, அது இதுவாகத்தான் இருக்கும். ஆசிரியர்கள் பார்த்தது ஒருபுறம். எல்லா வகுப்பு மாணவர்களும் பார்த்து நையாண்டி பண்ணியமை (அவர்கள் நையாண்டி பண்ணாவிட்டாலும் எனக்கு அப்படித்தான் தோன்றியது.) எனக்கு, எனது பள்ளி வாழ்வின் இறுதி நாள் இன்றாக ஆகட்டும் என ஆற்றாமையும் வெக்கமும் கலந்து வெப்பிராயமூட்டியது.

இப்பவும் பல ஆசிரியர்கள் தீர விசாரிக்காமல் என்ன ஏதென்று கேட்காமல் தண்டனையை ஈந்து விடுகின்றனர். பின்னர் தான் அவர்கள் உணரும்போது ஒன்றில் பிள்ளை பள்ளிக்கூடத்தினை விட்டு விலகி விடுகின்றான் (Drop outs) அல்லது ஆசிரியர் ஏன் அதிபர் உட்பட அனைவரும் நீதிமன்றம் வரை இழுபட வேண்டி வருகின்றது. அந்தக் காலம் இன்னும் நாலு அடி கூட விழுமேயல்லாமல் தண்டனை குறையாது. நாலு சொல் விசாரித்து உண்மைத் தன்மையை அறிந்து செயற்படும் அதிபர் பெரியவனாகி என்றென்றும் நிமிர்ந்து நிற்கின்றான். அவன் தனக்கென ஒரு மாணவ சமுதாயத்தினையே உருவாக்கி விடுகின்றான். அவன் இறந்த பின்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

அதிபர் சண்முகத்தார் எனக்கு அடித்தபோது தனது வீரப் பிரதாபங்களை பார்த்து வியந்தவர்களுக்கு கண்ணாலேயே ஒரு சுழட்டு சுழட்டி நன்றி சொல்லிவிட்டு தனது அறையினுள் தஞ்சம் புகுந்து விட்டார். (அதிபர் சண்முகத்தாரின்ர பிற்காலத் தொடர்பில் அவர் எனது அப்பாவுடன் நல்லமாதிரி. பிள்ளைகள் எனது நண்பர்கள். பேரப்பிளைகள் என்னிடம் படித்தவர்கள். நல்ல பிள்ளைகள்.)

என்னடா தாயைப் பற்றிக் கூறடா என்றால் தன்ர கதையை அளக்கின்றான் என்ற எண்ணம் உங்களுக்குள் ஓடுவது எனக்குப் புரிகிறது. பாடசாலையால் வீட்டுக்கு வந்ததும், எனது அத்தனை துன்பங்களும் அம்மாவின் மடியினுள் அழுகையுடன் சங்கமித்தன. நான் ஒன்றுமே கூறாமல், அண்ணன் மற்றும் அயலவர்களிடம் பெற்ற விபரங்களை வைத்துக் கொண்டு நடந்ததை ஊகித்து அறிந்து, “ஆறு கடக்காமல் பிள்ளை பள்ளிக்குப் போக கட்டுடையில் வீடு வேண்டும்” என அப்பருக்கு அரியண்டம் கொடுத்து, கட்டுடையில் வீடு மாற்றிய பெருமை, அம்மா உன்னையே சாரும். பின்னர் நாம் அதே ஊரில் சொந்த வீட்டில் வாழ்ந்த பெருமையும் உனக்குரியது.

ஒரு பிள்ளைக்குக் கல்விக்குத் தேவையானதில் எல்லாவற்றையும் அதன் தாயால் வழங்க முடிவதில்லைத்தான். ஆனால் உள்ளவற்றுள் அவசியமானதும் முதன்மையானதும் எது எனக்கண்டறிந்து அதனை அத்தனை வறுமைக் காலத்திலும் நீ செயற்படுத்தியதன் மூலம் இன்றும் நான் ஒரு அடிப்படையான கல்வித் தேவையை நிறைவு செய்தவன் என்றவாறு நிற்கச் செய்தவள். ஒரு வேளை அதனை நீ நிறைவேற்றாதிருந்தால்

"துள்ளித்திரியும் வயதில் என் துடுக்கையடக்கிப்
பள்ளிக்குச் செல்லவைக்கலையே என் அப்பனெனும் பெரும் பாதகனே."

என்ற வரிகளை மனதளவாவது சொல்ல வேண்டியிருந்திருக்கும். அது மட்டுமன்றி அந்த அதிபரையும் தீங்கிழைக்காதவராகக் காப்பாற்றி விட்டாய். இது இன்று வரை அந்த அதிபருக்குத் தெரிய நியாயமில்லை. அது இனியும் தெரிய முடியாது.



# அன்னை


**திருமதி சுகந்தி அன்ரனி தவச்செல்வம்**
**(விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)**




அன்னமிட்டு அரவணைத்து
அன்பூட்டிய அன்னையே
அனுதினமும் அகம்மகிழ்ந்து
ஆசிக்கின்றேன் உன்னையே!
அம்மா என்னும் அன்புத்தெய்வம்
அள்ளித் தந்த சொத்து என்
கல்வியாம்
அம்மா அன்று விதைத்த
வித்துத்தான்
என் வாழ்வில் பட்டங்கள்
பதவிகளாம்.
கடவுளுக்கு பயப்படுதலே
ஞானத்தின் ஆரம்பம் எனக்கண்டு
பிள்ளைக்கு நியாயத்தின்
நெறிகளை ஊட்டிய தாய்
நீதியையும் நியாயத்தையும
பின்பற்றி நடந்து
ஜீவனையும் மகிழ்ச்சியையும்
கண்டடைந்த தாய்

சிறுமையானவர்களுக்குத
தன்கையைத் திறந்து
திக்கற்றோருக்குத் தன்
கரங்களை
நீட்டிய தாய்
ஆலோசனைகளைக் கேட்டு
புத்தியை ஏற்றுக் கொண்டு
நன்மை செய்ய காத்துக்
கொண்டிருந்த
ஆசையுள்ள தாய்
பெருமையையும்
அகந்தையையும்,
தீயவழிகளை வெறுத்து
புத்தியுள்ள சிந்தையுடன்
உத்தமமாய் நடந்த தாய்
பலவானைப் பார்க்கிலும்
நீடிய பொறுமையுடன்
நிலைத்து
ஆபத்தை முன்குறித்து
தண்டனைக்கு விலக்கிய தாய்

தன் வாயையும், தன்
நாவையையும்
காத்து
தன் ஆத்துமாவை
இடுக்கண்களுக்கு விலக்கிய
தாய்
அக அழகில் கூட
அத்தனை அழகு என் தாய்
படி படி என்னும்
கட்டளையைத் தவிர
வேறு வார்த்தையில்
கடிந்ததில்லை
எம் தாய்
தன் ஆசைகளை
புறந்தள்ளி
எம் ஆசைகளைப்
பூர்த்தி செய்து
தன்னுயிரை ஈந்து
நீங்கா நினைவுக்கு
நிழலாகும் என் தாய்.



# எனக்காய் என் தாய்



**மீராசாஹிபு ஷிபாயா பேகம்**
**(விரிவுரையாளர், அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை)**

மறைபோற்றும்
கறைபடையாக் காவியமாய்
நிறைமனதில்
நீங்காத ஓவியமாய்
எனக்காய் எப்பொழுதும்
இறைதந்த அருள் பொதிந்த
றஹ்மதும்மா எனும் பெயர்
சொல்லும் என் அன்னையவள்

பள்ளிமுடிந்து
பல்கலை சென்று
பட்டதாரி ஆகிநான்- மீண்டும்
பாடம் சொல்லிக்கொடுக்கும்
பங்குவம் பெற்று
உழைக்கும் கரங்களாய்
உதவும் உள்ளமாய் நான்
இருக்கஎனக்காய் நீ இருந்த
நாழிகைகள்
படைத்தவனை நான்
அடையும் வரை
பதில் சொல்லும்

அன்பின் இலக்கணமாய்
கருணைமிகு காருண்யமாய்
மட்டுமல்ல
கட்டுப்பாட்டுடன் நான் இருக்க
கண்டிப்பிலும் கவனமாய் இருந்து
நீங்கள் கண்டித்த தருணங்கள்
தடம்பதிக்க நான்
கற்றுக்கொண்ட
பாடங்கள்

‘‘ஈன்றபொழுதில் பெரிதுவக்கும்
சான்றோன் எனக்கேட்ட தாய்’’
வள்ளுவனின் வாக்கிற்கிணங்க
வருட பெறுபேற்றிலும்
வழிநிறையப்பெற்ற
வெற்றிப்புளகாங்கிதத்திலும்
பெருமையகற்றி அமைதியாய்
‘புகழ் அனைத்தும்
இறைவனுக்கே’ எனும்
புனிதம் நிறை மனிதம் - நீங்கள்

பூரிப்புடன் அள்ளி அணைத்து முத்தமிட்டு
எப்பொழுதும் எனைப்பிரியாது
நான் புரிந்து கொண்ட கணிதம்- நீங்கள்
இப்போதும் எப்போதும் எனக்கே சொந்தம்
அன்னையவள் ஈன்றெடுத்த
அறுவர் நாம்
அன்றுமுதல் இன்றுவரை
எங்கு சென்றாலும்
அனுபவம் பேசும்
தாய் மொழி அறிந்து- அனுமதி கடந்து
உந்தன் ஆக்கிரமிக்கும் அன்பு நிறை
கண்டிப்புகள் என்றும்
நாம் கூறும் வேதம்
எனக்காய் என் தாய் என
ஓதும்

முயற்சியும் தியாகமும்
கண்டிப்பும் இறைவேண்டுதலும்
கலந்து நீங்கள் வார்த்து விட்டதன் பலன்
அந்தஸ்தில் கௌரவத்தில் அறுவர் நாம்
அடைந்திட்ட அத்தனையும்
பறைசாற்றும்
பாடப்புத்தகம் நீங்கள்

பக்குவமான உன் பாடங்கள்
அவையோ பல பக்கங்கள் அதில்
பக்கம் ஒன்றைப் பாடுகின்றேன்
பார்ப்பவர்க்கும்
அர்த்தங்கள் புரிவதற்காய்

பத்துவருடங்கள் முன்னொரு பொழுதில்
பயணம் ஒன்று செல்வதற்காய் நான்
ஆயத்தமாய் அன்னையவள் அருகில்
ஆசிபெற ஆர்வமாய் சென்ற வேளை
மாலை நேரமது என்
மாலையில் இருந்து
மாணிக்கம் ஒன்று கழன்று விழும்
மாயை கண்டு மாணிக்கம் தொட்டு
கவனம் என்று கருத்துடனே
பகன்றார்
கண்டு கொள்ளவே இல்லை நான்
பயணம் முடித்து என் கழுத்தில்
ஆரத்தைப் பார்த்தேன்
மாணிக்கமது காணாமல் போயிருந்த
மாயை அறிந்தேன்

ஆம் அன்னையவள் சொல் தட்டியதன்
தவறை உணர்ந்தேன்
கற்றுத்தந்த பாடமதில் இன்று வரை
கருத்துடனே நான்
இன்று அகவை அறுபது கடந்து
ஆரோக்கியமிழந்து
அழகு குன்றியிருப்பதை
ஆண்டவனிடம் பிரார்த்திக்கின்றேன்
அன்னையே
எனக்காய் நீங்கள் இருந்த பொழுதுகள்
போதும்
இனி உங்களுக்காய் நான்………..

# அம்மாவின் ஆசியைப் பெற்றிடுவேன்

**க. விக்னேஸ்வரி**
**(விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)**

ஓயாமல் உழைத்து நிற்கும்
ஓர் உயிரை நினைப்பதற்கு
தாய் நாளாய் ஒரு நாளை
தரணியிலே வைத்துள்ளார்
வாழ்வெல்லாம் எமக்காக
ஈந்து நிற்கும் அவ்வுயிரை
வதங்காமல் காப்பது தான்
மாநிலத்தில் தாய்த்திருநாள்
சுமை என்று கருதாமல்
சுகமாக எனைச் சுமந்து
புவி மீது வந்தவுடன்
புத்துணர்வு அவள்
அடைந்தாள்
அழுது அழுது அவதியுற்று
அவள் என்னைப் பெற்றிட்டாள்
அவள் மகிழச் செய்வதுவே
நான் செய்யுங் கைம்மாறாம்
காத்துவிடும் தெய்வமாய்
காலமெல்லாம் இருந்திடுவாள்
கண்ணுக்குள் மணியாக
எண்ணி எனைக் காத்திடுவாள்
பார்க்கும் இடம் எல்லாமே
பார்த்திடுவாள் என்னையே
பாரினிலே அவளுக்கு
ஈடாவார் எவரும் முண்டோ
இரவு பகல் அவள் அறியாள்
எனையணைத்து
இருந்திடுவாள்
வறுமை நிலை அடைந்தாலும்
வாடி விடாது எனைக்காத்தாள்

பொறுமை தனை ஆபரணமாய்
பூண்டிடுவாள் வாழ்வெல்லாம்
நிறைகுடமாய் அவளைப் போல்
நீள்புவியில் யாருமுண்டோ
நோயணுகா தெனைக்காக்க
தானிருந்தாள் பத்தியமாய்
வாய்முழுக்க மந்திரத்தை
உச்சரிப்பாள் நாளுமவள்
ஊணுறக்கம் தனை மறப்பாள்
உடற்களைப்பை உதறிடுவாள்
நீள்புவியில் இவளைப்போல்
யாரிருப்பார் எனைக் காக்க
ஈன்ற பொழுதில் தான் பட்ட
துன்பமெல்லாம்
சான்றோனாய் ஆக்குவதற்கும்
என நினைப்பாள் தாயவளும்.
துன்பத்தை தானெடுத்து
இன்பத்தை எனக்களித்தார்
இப்புவியில் தாயை விட
வேறெவரும் இல்லையென்றோ
அன்னைக்கு பூச்செண்டு
கொடுக்கின்ற வேளையிலே
அவர் அகத்தை உடையாமல்
காப்பது தான் அவசியம்
அன்னையினை வீட்டை விட்டு
காப்பகத்தில் சேர்த்த பின்னர்
அன்னை தினம் எனச் சொல்லி
ஆரவாரம் செய்யாதீர்
பெற்றவளைப் பேணிடுவார்
பெரும் பேறு பெற்றிடுவார்
உற்றதுணை என உணர்ந்து
பெற்றவளைக் காத்திடுவோம்
எமை ஈன்ற அன்னையினை
எம்முடனே வைத்திடுவோம்.
அவள் ஆசி பெற்று நிதம்
அவள் பாதம் பணிந்து
நிற்போம்.

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| **முதற் பதிப்பு** | : | 19 ஓகஸ்ட் 2020 |
| **நூலின் பெயர்** | : | அம்மா… (தொகுதி II) |
| **தொகுப்பாசிரியர்** | : | செல்வி. விக்னேஷ்வரி கந்தசாமி ஐயர் |
| **அட்டைப்பட வடிவமைப்பும் பக்க வடிவமைப்பும்** | : | திரு. ம.நிரேஸ்குமார் |
| **வெளியீடு** | : | யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கோப்பாய். |